சென்று நடுவே இடையூறு செய்ய அவளுக்கு மனமில்லை. ஆசா கீழே வருவதைக் கண்டதும் சாப்பிடும் இடத்தில் உணவை எடுத்து வைத்து மகேந்திரனுக்குச் சொல்லி அனுப்பினாள். மகேந்திரன் சாப்பிட உட்கார்ந்ததும், ஆசா மேலே அறைக்குள் ஓடித் தன் படத்தைக் கிழித்து மாடிச் சுவருக்கு அப்பால் எறிந்தாள். பின்னர்த் தன் புத்தகங்களை எடுத்துக்கொண்டு சென்றாள்.

உணவான பின்னர், மகேந்திரன் படுக்கை அறைக்கு வந்தான். ராஜலட்சுமி இங்குமங்கும் தேடியும் ஆசாவைக் காணவில்லை. கடைசியில் கீழே சமையலறையில் ஆசா தனக்காகப் பால் காய்ச்சுவதைக் கண்டாள். அது அவளுடைய வேலையல்ல; ராஜலட்சுமிக்காக இரவு வேளைகளில் பாலைக் காய்ச்சும் வேலைக்காரி பக்கத்திலேயே இருந்தாள். ஆசா இப்படிக் காரணமின்றி ஊக்கம் காட்டுவது அவளுக்கும் பிடிக்கவில்லை. சுத்தமான தண்ணீரை விட்டுப் பாலில் ஓரளவு அவள் எடுத்துக்கொள்வது கெட்டுப்போகிறதே என்று உள்ளூற வேலைக்காரிக்குக் கவலை.

ராஜலட்சுமி, "இதென்ன அம்மா, இங்கே இருக்கிறாயே? மாடிக்குப் போ!" என்றாள்.

ஆசா மாடிக்குப் போய் மாமியாரின் அறைக்குள் அடைக்கலம் புகுந்தாள். இந்தச் செய்கை ராஜலட்சுமிக்கு வெறுப்பை ஊட்டியது. 'ஏதோ அந்த மாயக்காரியின் வலையிலிருந்து ஒரு கணமாவது வீட்டுக்கு வந்தானே மகேந்திரன்; இந்தப் பெண்ணோ கோபம், பிணக்கு எல்லாம் சேர்த்துக் காட்டி அவனை மறுபடி வீட்டைவிட்டுத் துரத்துவாள்போல் இருக்கிறாளே! மகேந்திரன் விநோதினியின் வலைக்குள் வீழ்வதற்கு ஆசாதான் காரணம். ஆண்பிள்ளை தவறான வழியில் எப்போதுமே செல்லத் தயாராக இருப்பது சுபாவம்; எப்படியாவது அவனைத் தந்திரமாக வளையக் கட்டி நேர்வழியில் செலுத்துவதுதானே பெண்களின் கடமை!' என்று அவள் நினைத்தாள்.

ராஜலட்சுமி மிகவும் கடுமையான குரலில், "இதென்னடி கூத்து! ஏதோ உன் அதிர்ஷ்டம் உன் புருஷன் வீட்டுக்கு வந்தான்; இப்படி நீ சட்டிபோல் முகத்துடன் ஒளிந்து ஏன் திரிகிறாயோ?" என்றாள்.

தன்னைக் குற்றவாளி என்று எண்ணிய ஆசா அங்குசத்தால் குத்துண்டவள்போல் மேலே சென்று, மனம் தயங்க இடம் அளிக்காமல் விர்ரென்று ஒரே மூச்சில் அறையினுள் நுழைந்தாள். மணி பத்தாகிவிட்டது. மகேந்திரன் அப்போதுதான் கட்டிலின் எதிரே நின்று ஏதோ யோசனை

யுடன் கொசுவலையை உதறிக்கொண்டிருந்தான். விநோதினியின்மேல் அவனுக்குத் தீவிரமாகக் கோபம் மூண்டிருந்தது. 'என்னை விலைக்கு வாங்கிய அடிமை என்றுதான் கட்டாயமாக எண்ணியிருக்கிருள். ஏனென்ருல், மனத்தில் சற்றும் சந்தேகம் இராமல் என்னை ஆசாவிடம் அனுப்பியிருக்கிருளே! நான் இன்றுமுதல் ஆசாவிடம் என் கடமைப்படி நடக்கத்தொடங்கினுல், விநோதினி எவரைத் துணை கொண்டு இந்த உலகத்தில் நிற்பாள்?' இந்தக் கடமையை நிறைவேற்றும் ஆசையை என்னுல் தீர்த்துக்கொள்ள முடியாது' என்னும் அளவுக்குக் கேடு கெட்டவனு நான்? கடைசியில் அவள் என்னைப் பற்றித் தெரிந்துகொண்டது இதுதானு? என்மீது அவள் அக்கறையும் கொள்ளவில்லை; நான் கீர்த்தியும் பெறவில்லை. என்னை அவமதிக்க அவள் தயங்கக்கூட இல்லையே? விநோதினியின் கொற்றத்தை எதிர்த்தே ஆகவேண்டும்' என்று அவன் கொசுவலையின் முன் நின்றவாறு உறுதியாக நினைத்தான்: 'எப்படியாவது ஆசாவின் பக்கம் மனத்தைத் திருப்பி, விநோதினி செய்த அவமதிப்புக்குப் பழி தீர்த்துக்கொள்ள வேண்டும்.'

ஆசா அந்த அறையினுள் நுழைந்ததுமே, ஏதோ நினைவாகக் கொசுவலையைத் தட்டிக்கொண்டிருந்த அவன் சட்டென்று நிறுத்தினுன். எவ்வாறு ஆசாவுடன் பேச்சைத் தொடங்குவது என்பது அவனுக்குப் பெரும் புதிராகத் தோன்றியது. வறட்டுச் சிரிப்புடன் அவன் வாய்க்கு வந்ததைச் சட்டென்று சொன்னுன்: ''நீகூட என்னைப்போல் படிப்பில் இறங்கிவிட்டாய்போல் இருக்கிறது. இங்கே புத்தகங்கள் இருந்தனவே, எங்கே போய்விட்டன எல்லாம்?''

இந்தச் சொற்கள் சமயத்துக்கு மாருகத் தோன்றியவை மட்டுமல்ல; ஆசாவைத் தாக்கவும் செய்தன. அப்பாவியான ஆசா படிக்க முயற்சி செய்வது அவள் வரையிலும் ரகசியமே. இந்தச் செய்தி கேலிக்கிடம் என்றே அவள் கருதினுள். தான் கற்க வேண்டுமென்ற விஷயம் முக்கியமாக மகேந்திரனுக்குச் சிறிதளவுகூடத் தெரியக்கூடாது என்று அவளுக்கு எண்ணம். இத்தனை நாட்கள் கழிந்த பின்னர் முதலிலேயே சிரித்தவாறு அவன் அந்தப் பேச்சை எடுக்கவே, சுரீலென்று பிரம்படிபட்ட குழந்தையின் மென்மையான உடல்போல் ஆசாவின் உள்ளம் கூசிக்கொண்டது. அவள் மனமும் வருந்தியது. அவள் பதில் ஏதும் கூருமல் முகம் திருப்பியவாறு மேஜையைப் பிடித்துக்கொண்டு நின்ருள்.

வார்த்தைகளைச் சொன்னதுமே, அவை சமயத்துக்கு ஏற்ருற்போல் இல்லை என்று மகேந்திரனுக்கும் தெரிந்தது.

ஆனல் இந்தமாதிரி வேளையில் எப்படிப் பேசுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. நடுவே இவ்வளவு பெரிய புரட்சி நடந்த பின்னர், முன்போல் சகஜமாகப் பேச வராது. உள்ளமும் ஊமையாகியது. புதிதாக எதையும் பேச அது தயாராக இல்லை. படுக்கையில் படுத்துவிட்டால், அந்தத் தனிமையான சூழ்நிலையில் பேசுவது சகஜமாக இருக்கும் என்று எண்ணி அவன் கொசு வலையின் வெளிப்பக்கத்தைப் பிடித்து உதறினன். புதிதாக மேடையில் ஏறும் நடிகன் திரையின் வாயிலருகில் நின்று பரபரப்புடன் பாடத்தை மனத்துக்குள் சொல்லிக்கொள்வதுபோல், மகேந்திரன் கொசு வலையின் எதிரே நின்று என்ன சொல்வது, என்ன செய்வது என்று தனக்குள் யோசித்தான். அதே சமயம் மிகச் சிறிய ஓசை கேட்டு அவன் திரும்பியபோது ஆசா அறையில் இல்லை.

42

மறு நாள் காலை மகேந்திரன் தாயிடம், ''அம்மா, படிப்பதற்கு எனக்குத் தனியாக ஓர் அறை வேண்டும். சித்தி இருந்த அறையில் நான் இருக்கப்போகிறேன்'' என்ருன்.

தாய்க்கு இது களிப்பை ஊட்டியது: மகேன் வீட்டில்தான் இருக்கப் போகிருன்! பெண்டாட்டியுடன் சமாதானமாகிவிட்டிருக்கும். தங்கமான மருமகள்! இவளை எத்தனை நாளைக்குத் தான் ஒதுக்கிவைக்க அவனல் முடியும்? இத்தகைய லட்சுமியை விட்டு ஏதோ ஒரு மாயப் பிசாசைக் கட்டிக்கொண்டு மறந்திருக்க எவ்வளவு நாட்கள்தான் அவனல் முடியும்?

''நல்லதடா, மகேன்'' என்று அவள் மூடிக் கிடந்த அந்த அறையைத் திறந்து விளக்கிச் சுத்தம் செய்யத் தொடங்கினள். ''அம்மா, அடி ஆசா! எங்கேயடி போனய்?'' என்று வெகுவாகத் தேடிய பின் ஒரு மூலையில் கூசிக் கிடந்தவளை வெளிக்கொணர்ந்தாள் அவள். ''சுத்தமான கம்பளம் ஒன்று கொண்டு வா. இங்கே மேஜை இல்லை. ஒரு மேஜையைப் போடவேண்டும். இந்த விளக்குப் போதாது; மாடியிலிருந்து விளக்கைக் கொண்டு வா'' என்றதும், இருவரும் சேர்ந்து அன்னபூரணியின் அறையை, வீட்டு மன்னர் தங்குவதற்கு ஏற்ற சிம்மாசனமாக மாற்றிவிட்டனர். பணி செய்பவர்களின் பக்கம் சற்றும் பாராமல் கம்பீரமாக மகேந்திரன் புத்தகங்களுடன் அறையினுள் நுழைந்தான். பிறகு

பொழுதைச் சிறிதும் வீண் அடிக்காமல் அக்கணமே படிக்கவும் தொடங்கிவிட்டான்.

சாயங்காலம் சாப்பிட்டானதும் மகேந்திரன் மீண்டும் படிக்க உட்கார்ந்தான். அவன் மாடிப் படுக்கை அறையில் படுத்துக்கொள்ளுவானு, அல்லது கீழேயே தூங்குவானு என்பது எவருக்கும் விளங்கவில்லை. ராஜலட்சுமி மிகவும் அக்கறையுடன் ஆசாவைப் பதுமை போலச் சிங்காரித்தாள். ''போ அம்மா, மகேந்திரன் மேலேதான் படுத்துக்கொள்ளப் போகிருனு என்று கேட்டு வா'' என்ருள்.

இந்தக் கேள்வியைக் கேட்க அவன் அறைக்குச் செல்ல ஆசாவின் கால்கள் எழவில்லை. அவள் தலைகுனிந்தவாறு நின்ருள். ராஜலட்சுமி கோபமூண்டு அவளை மிகவும் கடுமையாகத் திட்டினுள். ஆசா மிகவும் கஷ்டத்துடன் கதவுவரையில் சென்ருள்: அதற்குமேல் முன் செல்ல அவளால் முடியவில்லை. ராஜலட்சுமி தொலைவிலிருந்து மருமகளின் போக்கைக் கவனித்து வராந்தா மூலையிலிருந்து கோபத்துடன் சைகை செய்தாள். ஆசா வேறு வழியின்றி உள்ளே நுழைந்தாள். பின்னுல் ஓசை கேட்கவும், மகேந்திரன் புத்தகத்திலிருந்து தலை நிமிராமல், ''இன்னும் எனக்கு அதிக நேரமாகும். மறு படியும் காலையில் வேறு சீக்கிரமாக எழுந்திருக்க வேண்டும். நான் இங்கேயே படுத்துக்கொள்கிறேன்'' என்ருன்.

என்ன வெட்கக் கேடு! அவனை மேலே படுக்க வரச் சொல்லி வேண்டவா ஆசா வந்தாள்!

அறையினுள்ளிருந்து அவள் வெளியே வந்ததுமே ராஜ லட்சுமி வெறுப்புடன் கேட்டாள்: ''என்ன! என்னடி நடந்தது?''

''இப்போது அவர் படிக்கிருர். கீழேயே படுத்துக் கொள்கிருராம்'' என்று ஆசா அவமானம் தாங்காமல் தன் படுக்கையறைக்குள் நுழைந்தாள். எங்குமே அவளுக்கு நிம்மதி இல்லை. உலகமே அவளுக்குச் சுடுவெயிலில் பொரியும் மணல் பரப்புப்போல் தோன்றியது.

இரவு கொஞ்சம் நேரம் கழிந்தபின் படுக்கையறையின் கதவு தட்டும் ஓசை கேட்டது: ''அம்மா! அடியம்மா ஆசா! கதவைத் திற!''

ஆசா பரபரவென்று கதவைத் திறந்தாள். இழுப்பு நோயுடன் மேலே வந்ததால் ராஜலட்சுமிக்கு மேல் மூச்சு வாங்கியது. உள்ளே வந்ததுமே அவள் கட்டிலில் உட் கார்ந்துவிட்டாள். சற்றுப் பொறுத்துப் பேச முடிந்தது: ''இதென்னடி, அம்மா! மேலே வந்து கதவைப் போட்டுக் கொண்டாயே! இதுதான் உன் கோபதாபங்களுக்கு வேளையா?

இத்தனை கஷ்டங்கள் பட்டும் உனக்குப் புத்தி வரவில்லையா? போ, கீழே போ!''

ஆசா மெதுவாக, ''அவர் தனியாக இருக்கவேண்டும் என்றாரே!'' என்றாள்.

''தனியாக இருப்பேனென்றால் போவதா? கோபத்தில் ஏதோ ஒன்று சொன்னான். அதைக் கேட்டுவிட்டுப் பிணங்கு வதா? இவ்வளவு கோபம் ஆகாது..போ, சீக்கிரம் போ!''

கஷ்டம் வந்தால் மாமியார் மருமகளிடம் எதற்காகக் கூச்சம் கொள்வது? அவள் கையில் இருக்கும் வழிகளையெல்லாம் உபயோகித்து மகேந்திரனை எவ்வாறேனும் கட்டுக்குள் வைத்திருக்கத்தான் பார்த்தாள்.

ஆசாவிடம் மிகவும் வேகமாகப் பேசவே, ராஜலட்சுமிக்கு மீண்டும் மூச்சு வாங்க ஆரம்பித்தது. ஓரளவு சமாளித்துக்கொண்டு அவள் எழுந்தாள். ஆசாவும் மறு பேச்சின்றி அவளைப் பிடித்துக்கொண்டு கீழே வந்தாள். ராஜலட்சுமியை அவளுடைய படுக்கையில் உட்காரவைத்து முதுகுப்புறம் தலையணைகளை ஒழுங்காக வைத்தாள். ராஜலட்சுமி, ''கிடக்கிறது. ஸுதோவைக் கூப்பிடு. நீ போ! இன்னும் நாழிகை ஆக்காதே!'' என்றாள்.

ஆசா அதற்குமேல் தயங்கவில்லை. மாமியாரின் அறையிலிருந்து கிளம்பி அவள் நேரே மகேந்திரனுடைய அறைக்குள் சென்றாள். மகேந்திரன் எதிரே மேஜையின்மேல் திறந்தபடி புத்தகம் கிடந்தது. மேஜையின்மேல் கால்கள் இரண்டையும் தூக்கி வைத்துக்கொண்டு, நாற்காலியில் சாய்ந்தவாறு அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தான். பின்புறம் ஓசை கேட்கவே அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். யாருடைய நினைவில் மெய்ம்மறந்து இருந்தானோ, அவளே நேரில் வந்துவிட்டாளோ என்ற மருள் அவனுக்கு மூண்டது. ஆசாவைக் கண்டதும் அவன் கால்களைக் கீழே வைத்துத் திறந்த புத்தகத்தை மடியில் இழுத்துக்கொண்டான்.

மகேந்திரன் உள்ளூற வியப்படைந்தான். இப்போதெல்லாம் ஆசா கூச்சமின்றி அவன் எதிரே வருவதில்லை. இருவருக்கும் எதிர்பாராமல் சந்திப்பு நேரிட்டால் அவள் உடனே போய்விடுகிறாள். இன்றிரவு அவள் இவ்வளவு நேரங் கழித்து அவன் அறைக்குள் நுழைவது மிகவும் வியப்புக்குரிய விஷயமல்லவா! மகேந்திரன் புத்தகத்திலிருந்து முகம் தூக்காமலே ஆசா திரும்பிச் செல்லும் அறிகுறி இல்லை என்று கண்டுகொண்டான். அவள் அவன் எதிரே வந்து உறுதியாக நின்றாள். அதற்குமேலும் படிப்பதுபோல் பாசாங்கு செய்ய அவனால் முடியவில்லை; தலை நிமிர்ந்து பார்த்தான். ஆசா

மிகவும் தெளிவாக, "அம்மாவுக்கு இழுப்பு அதிகமாகிவிட்டது. நீங்கள் ஒரு முறை வந்து பார்த்தால் நல்லது" என்றாள்.

"அவள் எங்கே இருக்கிறாள்?"

"படுக்கை அறையில்தான் இருக்கிறார். தூக்கம் வரவில்லையாம்."

"வா, பார்க்கிறேன்."

பல நாட்கள் கழிந்த பின்னர் ஆசாவுடன் சற்றுப் பேசியதும் அவனுக்கு ஏதோ பளு நீங்கியதுபோலத் தோன்றியது. மௌனம் தகர்க்க முடியாத கோட்டைச் சுவர்போல் கணவன் மனைவியரிடையே கருநிழல் விழச் செய்திருந்தது; அதைத் தகர்க்கக் கூடிய ஆயுதம் மகேந்திரன் வசம் இல்லை. இந்தச் சமயத்தில்தான் ஆசா தன் கைகளால் அக்கோட்டையின் திட்டிவாசலைத் திறந்துவிட்டாள்.

ராஜலட்சுமியின் அறைக்கு வெளியே கதவருகில் ஆசா நின்றாள். மகேந்திரன் உள்ளே நுழைந்தான். வேளையற்ற வேளையில் மகேந்திரன் உள்ளே வரவும், ராஜலட்சுமி பயந்தாள்; மீண்டும் மனைவியுடன் சண்டையிட்டுக்கொண்டு புறப்படுமுன் சொல்லிக்கொள்ள வருகிறானே என்று அவள் அஞ்சினாள். "மகேன்! இன்னும் தூங்கவில்லையா?" என்றாள்.

"அம்மா! உனக்கு இழுப்பு அதிகமாகி விட்டதா?"

இத்தனை நாட்களுக்குப் பின்னர் இந்தக் கேள்வி வரவே, தாயின் உள்ளத்தில் பிணக்குத் தலை தூக்கியது. பெண்டாட்டி போய்ச் சொன்னதுந்தான் தாயைப்பற்றி விசாரிக்க வந்திருக்கிறான் என்பதை அவள் உணர்ந்தாள். இந்தப் பிணக்கின் வேகம் தாளாமல் அவள் மார்பு பின்னும் அதிகமாக அடித்துக்கொண்டது. கஷ்டத்துடன் அவள், "போய்த் தூங்கு, போ! எனக்கு ஒன்றுமில்லை" என்றாள்.

"இல்லையம்மா; ஒரு தடவை சோதனை செய்துவிடுவது மேல். இந்த வியாதியை அலட்சியமாக விடக்கூடாது."

தாயின் இதயம் பலவீனமானது என்று மகேந்திரனுக்குத் தெரியும். ஆகவே, அவளுடைய முகக் குறியைக் கண்டதும் அவனுக்கும் கவலை உண்டாகியது.

"சோதனையும் வேண்டாம்; எதுவும் அவசியமில்லை. இந்த வியாதி என்றும் தீராது" என்றாள் ராஜலட்சுமி.

"சரி, இன்று ராத்திரிமட்டும் தூங்குவதற்கு மருந்து கொண்டுவந்து தருகிறேன். நாளைக்கு நன்றாகப் பார்த்துக் கொள்ளலாம்."

"ஏகப்பட்ட மருந்து சாப்பிட்டாயிற்று. மருந்தினால் எனக்கு ஒன்றும் பலன் இல்லை. போடா மகேன்! ராத்திரி ரொம்ப நேரமாகிவிட்டது. தூங்கு போ!"

''உனக்குக் கொஞ்சம் சரியானதும் போகிறேன்.''

ராஜலட்சுமி ரோஷத்துடன் கதவருகில் நின்ற மருமகளை அழைத்தாள். ''ஏனடியம்மா, இந்த ராத்திரி வேளையில் மகேனை வீணுக்கு இங்கு அழைத்து வந்தாய்? அவனுக்கு எரிச்சலூட்டவா?'' என்று சொன்னதுமே அவளுக்கு மறு படியும் மூச்சுத் திணறல் அதிகரித்தது.

ஆசா உள்ளே நுழைந்ததும், மெதுவான குரலில் சற்று உறுதியாகவே, ''நீங்கள் போய்த் தூங்குங்கள். நான் அம்மா விடம் இருக்கிறேன்'' என்ருள்.

மகேந்திரன் ஆசாவை மறைமுகமாக அழைத்து, ''நான் மருந்து கொண்டுவர ஆள் அனுப்பியிருக்கிறேன். புட்டியில் இரண்டு அடையாளக் குறி இருக்கும். ஓர் அளவு கொடுத் தும் தூக்கம் வராவிட்டால் ஒரு மணி நேரம் பொறுத்து இன்னோர் அளவையும் கொடு. ராத்திரியில் மூச்சுத் திணறல் அதிகமானுல் என்னைக் கூப்பிட மறக்காதே'' என்ருன்.

மகேந்திரன் தன் அறைக்குச் சென்ருன். இன்று ஆசா வைக் கண்ட விதமே புதிதாக இருந்தது. இந்த ஆசாவிடம் கூச்சமோ, எளிமையோ இல்லை. தன் உரிமைகளை நன்கு அறிந்து ஏற்றுக்கொண்டிருந்தாள் ஆசா. அதற்காக அவள் மகேந்திரனிடம் பிச்சை எடுக்க வேண்டியதில்லை. சொந்த மனைவியை அவன் அலட்சியம் செய்தான். ஆனுல் வீட்டு மருமகளிடம் அவனுக்கு ஒரு மரியாதை உண்டாயிற்று.

தன்மேல் கொண்ட அக்கறையினுல்தான் ஆசா மகேனை அழைத்து வந்தாள் என்று எண்ணி ராஜலட்சுமி உள்ளூறச் சந்தோஷப்பட்டாள். ''அம்மா! உன்னைத் தூங்க அனுப் பினேன். மகேந்திரனை ஏன் நீ இழுத்துக்கொண்டு வந்தாய்?'' என்ருன்.

ஆசா அதற்குப் பதில் அளிக்காமல் கையில் விசிறியுடன் அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

''போ, அம்மா, தூங்கு, போ!''

ஆசா மெதுவாக, ''என்னை இங்கேதான் இருக்கச் சொன்னுர்'' என்ருள். தாயின் பணிவிடைக்காக அவளை ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னுல், ராஜலட்சுமிக்குக் களிப்பு உண்டாகும் என்று ஆசாவுக்கு நன்ருகத் தெரியும்.

43

ஆசாவினுல் மகேந்திரனை வளையக் கட்ட முடியவில்லை என்று கண்டுகொண்டாள் ராஜலட்சுமி. 'என் நோய் காரணமாகவாவது அவன் வீட்டில் இருந்தாலே நல்லது தான்' என்று அவளுக்குத் தோன்றியது. உடம்பு எங்கே குண மாகிவிடுமோ என்ற அச்சமும் மூளவே, அவள் ஆசாவை ஏமாற்றி மருந்தைக் கீழே எறிந்துவிடத் தொடங்கினுள்.

மகேந்திரன் எப்போதுமே அலட்சியமாக இருப்பவன்; எதையுமே அதிகம் கவனிக்க மாட்டான். ஆனுல் ராஜலட்சுமி யின் உடம்பு குணமாவது கிடக்க, பின்னும் நலம் குன்று வதை ஆசா உணர்ந்தாள். 'மகேந்திரன் அக்கறையோடு சரியான மருந்தைக் கொடுக்கவில்லை; தாயின் உடம்புபற்றி அவனுக்கு அக்கறையில்லை. அவ்வளவு தூரம் புத்தி மாறிவிட்டது' என்று அவளுக்குத் தோன்றியது. இவ்வளவு தூரம் கீழிறங்கிவிட்டது குறித்து அவள் அவனை உள்ளூறத் தூற்றவும் செய்தாள். ஒரு விதத்தில் கெட்டால், இப்படி எல்லா விதங்களிலுமா நாசமாக வேண்டும்!

ஒரு நாள் சாயங்காலம் நோய் தாங்காமல் தவிக்கும்போது ராஜலட்சுமிக்கு விஹாரியின் நினைவு வந்தது. எத்தனையோ நாட்களாக விஹாரி வரவில்லை. அவள் ஆசாவிடம், "அம்மா! விஹாரி இப்போது எங்கே இருக்கிருன், தெரியுமா?" என்றுள். பல காலமாக நோயுற்றபோதெல்லாம் விஹாரிதான் அவளுக் குப் பணி செய்வது வழக்கம். அது ஆசாவுக்குத் தெரிய வந்தது. அதனுல்தான் இப்போதும் விஹாரியின் நினைவு ராஜலட்சுமிக்கு வந்தது. 'இந்தக் குடும்பத்துக்கு நிலைத்த ஆதரவாக இருந்த விஹாரியும் விலகிச் சென்றுவிட்டார். அவர் இருந்தால் இந்த வேதனையில் அம்மாவுக்கு ஓரளவு கவனிப்பும் இருக்கும். இவரைப்போல் இதயமற்றவரல்ல விஹாரி!' - ஆசாவின் மார்பிலிருந்து நெடுமூச்சு எழுந்தது.

"விஹாரியோடு மகேன் சண்டை போட்டுக்கொண் டானு! அவன் செய்தது மிகவும் தவறு, அம்மா! அவனைப் போல் நன்மை செய்யும் நண்பன் மகேந்திரனுக்கு வேறு எவருமே கிடைக்க மாட்டான்" என்று சொல்லும்போது தாயி னுடைய விழிகளில் நீர் துளித்தது.

ஆசாவுக்குப் பல விஷயங்கள் ஒவ்வொன்ருக நினைவுக்கு வந்தன. அப்பாவித்தனமாகக் கண்மூடிக்கொண்டு நடந்த ஆசாவுக்குத் தக்க வேளையில் எச்சரிக்கை செய்ய விஹாரி பல விதமாக முயன்ருன்; அதன் பலனுக ஆசாவின் வெறுப்புக்கே

அவன் ஆளாக நேரிட்டது. இதை எண்ணி ஆசா தன்னைத் தானே நொந்துகொண்டாள். ஒரே நண்பனைக் கஷ்டங்களுக் குள்ளாக்கி, ஒரே பகையாளியைத் தழுவிக்கொண்ட இந்த நன்றி கெட்ட முட்டாளுக்குத் தெய்வம் ஏன் தண்டனை அளிக் காது! விஹாரி மனமுடைந்து பெருமூச்சுடன் வீட்டை விட்டு விடை பெற்றுச் சென்றான்; அவனுடைய பெருமூச்சு வீட்டை பற்றிக்கொள்ளாமல் இருக்குமா?

மீண்டும் வெகு நேரம் கவலையுடன் இருந்த ராஜலட்சுமி திடீரென்று, ''அம்மா, விஹாரி இருந்தால் இந்தச் சங்கடத் தில் நமக்கு ஒத்தாசையாக இருப்பான். இவ்வளவு தூரம் நடக்க விட்டிருக்க மாட்டான்'' என்றாள்.

ஆசா கம்மென்று யோசிக்கலானாள். ராஜலட்சுமி பெரு மூச்செறிந்தாள்: ''எனக்கு உடம்பு சரியில்லை என்று அவனுக் குத் தெரிந்தால், வராமல் இருக்கவே மாட்டான், அம்மா.''

விஹாரிக்கு விஷயம் தெரியவேண்டும் என்று ராஜலட்சுமி விரும்புவது ஆசாவுக்குப் புரிந்தது. விஹாரி இராமல் அவள் ஒரேயடியாக துணையற்றவள் ஆகிவிட்டாள்.

அறையினுள் விளக்கை அணைத்துவிட்டு, நிலவில் சாள ரத்தின் அருகே கம்மென்று மகேந்திரன் நின்றிருந்தான். வீட்டில் சுகம் ஏதுமில்லை. படிக்கவும் பிடிக்கவில்லை. நெருங்கிய உறவினர்களுடன் சாதாரணமாகப் பழகுவதும் விட்டுப் போயிற்று. அவர்களைப் பிறத்தியாரென்று விலக்கிவிடவும் முடியவில்லை. சகஜமாக அவர்களை ஏற்றுக்கொள்ளவும் முடிய வில்லை. துறக்கவும் முடியாத அந்த உறவு தாங்கமுடியாத பளு வைப்போல் அவனது இதயத்தை அழுத்தியது. தாயின் எதிரே செல்ல அவனுக்கு இஷ்டமில்லை. திடீரென்று அவன் அருகே வந்தால் அவள் ஏதோ சந்தேகமும் தயக்கமும் கலந்து ஆழ்ந்து கவனிப்பது மகேந்திரனைத் தாக்கியது. ஆசா ஏதாவது சாக்கிட்டு அருகில் வந்தால் அவளுடன் பேசுவதுகூடக் கஷ்ட மாக இருக்கிறது: கம்மென்றிருக்கவும் முடியவில்லை. இப்படி எவ்வாறுதான் நாட்கள் கழியும்? ஏழு நாட்களாவது விநோ தினியைப் பார்க்காமல் இருப்பது என்று அவன் உறுதியுடன் இருந்தான். இன்னும் இரண்டு நாட்கள் பாக்கி நின்றன. எவ்வாறுதான் அந்த இரண்டு நாட்களும் கழியுமோ!

மகேந்திரனுக்குப் பின்னால் யாரோ வரும் ஓசை கேட்டது. ஆசா அறையினுள் வருவதை அவன் உணர்ந்தான்; ஆனால் அது கேட்காதது போலவே அசையாமல் நின்றான். ஆசா அதைத் தெரிந்துகொண்டும், அறையை விட்டுச் செல்லவில்லை; பின்னால் நின்று, ''ஒரு விஷயம் சொல்லவேண்டும்: அதைச் சொன்னதும் போய் விடுகிறேன்'' என்றாள்.

மகேந்திரன் திரும்பினன். "போவானேன்! கொஞ்சம் உட்காரேன்" என்ருன்.

இந்த மரியாதைச் சொல்லைக் காதில் போட்டுக் கொள்ளாமல் ஆசா, "விஹாரி பாபுவுக்கு அம்மாவின் உடம்பைப்பற்றிச் சொல்லியனுப்ப வேண்டும்" என்ருள்.

விஹாரியின் பெயரைக் கேட்டதும் மகேந்திரனுடைய இதயத்தில் இருந்த புண்ணைச் சுரீரென்று குத்துவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவன் சற்றுச் சமாளித்தான். "ஏன்? என் சிகிச்சையில் நம்பிக்கை இல்லையா?" என்ருன்.

மகேந்திரன், தாயின் உடம்புக்குச் சிகிச்சை செய்யப் போதுமான அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்ற எண்ணம் ஆசாவின் மனத்தில் நிறைந்திருக்கவே, சட்டென்று பதில் அவள் வாயில் வெளிவந்தது: "எங்கே, அம்மாவுக்கு உடம்பு சரியாகவில்லை; தவிர, நாளுக்குநாள் அதிகமாகி வருகிறதே!"

இந்தச் சொல்லில் அடங்கியிருந்த வெம்மையை உணர்ந்தான் மகேந்திரன். இதுவரை ஆசா இப்படி மறைமுகமாகத் தாக்கியதில்லை. தன் ஆண்மைக்குத் தாக்குதல் ஏற்படவே அவன் வெறுப்புடன், "உன்னிடம் நான் வைத்தியம் கற்றுக் கொள்ளவேண்டும்போல் இருக்கிறது!" என்ருன்.

இந்தக் கேலிப் பேச்சு ஆசாவின் உள்ளத்தில் மண்டிக் கிடந்த துயரத்தை எதிர்பாராத விதமாகத் தூண்டியது: தவிர, அறை இருளாகிக் கிடந்தது. அதனுல் இதுவரை பதில் பேசாத ஆசா கூச்சமின்றி, பொங்கி எழும் துணிச்சலுடன், "வைத்தியம் கற்றுக்கொள்ளா விட்டாலும், அம்மாவைக் கவனிக்கவாவது தெரிந்துகொள்ளலாம்" என்று பதில் அளித்தாள்.

ஆசாவின் பதிலைக் கேட்டு மகேந்திரன் அடைந்த வியப்புக்கு ஓர் எல்லை இல்லை. பழக்கமற்ற இந்தச் சொல்லம்பைக் கேட்டு அவன் மிகவும் கடுமையாகிவிட்டான். "உன் விஹாரி பாபுவை ஏன் வீட்டுக்குள் வரத் தடை செய்தேன் என்பது உனக்குத் தெரியும். இன்று மறுபடியும் நினைவு வந்துவிட்டதாக்கும்!" என்ருன்.

ஆசா படபடவென்று அறையிலிருந்து வெளியே சென்ருள். வெட்கம் அவளை அவ்வாறு பிடித்துத் தள்ளியது. அவளுக்காக அல்ல அந்தக் கூச்சம்; குற்றத்தில் மூழ்கிக் கிடப்பவன் இப்படி அநியாயமாகப் புழிச் சொல்லைப் பேசலாமா? இவ்வளவு வெட்கம் கெட்டவனை மூடுவதற்கு மலையளவு கூச்சம் இருந் தாலும் முடியாதே!

ஆசா சென்றதும் மகேந்திரன் தன் முழுத்தோல்வியைப் புரிந்துகொண்டான்: ஆசா எப்போதாகிலும், எந்த நிலை

யிலும் தன்னை இப்படி ஏசுவாள் என்று மகேந்திரன் கற்பனை கூடச் செய்தவனல்ல. சிம்மாசனம் இருந்த இடத்தில் அவன் இன்று மண்ணில் புரண்டான். ஆசாவின் வேதனை வெறுப்பாக மாறிவிடுமோ என்ற சந்தேகமும் இத்தனை நாட்களுக்குப் பின் மூண்டது.

இன்னொரு பக்கம் விஹாரியின் நினைவு வந்ததுமே விநோதினியைப்பற்றிய கவலை அவனை வாட்டியது. விஹாரி மேற்கேயிருந்து வந்துவிட்டானோ என்னவோ! இதற்குள் விநோதினிக்கு அவன் விலாசம் தெரிந்தும் இருக்கலாம்; விஹாரியை அவள் "சந்தித்துக்கூட இருக்கலாம். அதற்கு மேலும் அவனால் சபதப்படி இருக்கமுடியுமா!

இரவு, ராஜலட்சுமிக்கு மார்புவலி அதிகமாகியது. அவள் தாங்க முடியாமல் மகேந்திரனைக் கூப்பிட்டனுப்பினாள். மிகவும் கஷ்டத்துடன் அவள், ''மகேன்! விஹாரியைப் பார்க்கவேண்டும் போல் இருக்கிறது. அவன் வந்து வெகு நாளாகிறது'' என்றாள்.

ஆசா மாமியாருக்கு விசிறிக்கொண்டிருந்தவள் தலை குனிந்தாள். மகேந்திரன், ''அவன் இங்கே இல்லையம்மா; மேற்கே யாத்திரை போயிருக்கிறான்'' என்றான்.

''என் மனம் சொல்கிறது: அவன் இங்கேயேதான் இருக்கிறான். உன்மேல் கோபம், அதனால்தான் வரவில்லை. என் தலையைத் தின்றாற்போல, நாளைக்கு ஒரு தடவை நீ அவன் வீட்டுக்குப் போய் வா.''

''சரி போகிறேன்'' என்றான் மகேந்திரன். எல்லோரும் விஹாரியைத்தான் அழைக்கிறார்கள். உலகில் எல்லாரும் தன்னைக் கை விட்டுவிட்டதாக மகேந்திரனுக்குத் தோன்றியது.

44

மறு நாள் விடியலில் மகேந்திரன் விஹாரியின் வீட்டுக்குச் சென்றான். வீட்டு வாயிலில் வேலைக்காரர்கள் பல மாட்டு வண்டிகளில் சாமான்களை ஏற்றிக்கொண்டிருப்பதை அவன் கண்டதும் பஜுவை, "என்னடா விசேஷம்?" என்று கேட்டான். "பாபு கங்கைக் கரையில் ஒரு தோட்டத்தை எடுத்துக்கொண் டிருக்கிறார். அங்கேதான் இதெல்லாம் போகிறது" என்றான் பஜு. "பாபு வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டான் மகேந்திரன். "அவர் இரண்டு நாள்தான் கல்கத்தாவில் இருந்தார். நேற்றுக் கங்கைக் கரைத் தோட்டத்துக்குப் போனார்" என்றான் பஜு.

இதைக் கேட்டதும் மகேந்திரனுக்கு உள்ளூறக் கவலை பிறந்தது. அவன் இராத சமயம் விநோதினி விஹாரியைச் சந்தித்திருக்கலாம் என்று அவன் உள்ளம் ஐயமற நம்பியது. விநோதினியின் வீட்டு வாயிலிலுங்கூட மாட்டு வண்டியில் அவளுடைய உடைமைகள் ஏற்றப்படுவது போன்ற காட்சி அவன் மனக்கண் முன் எழுந்தது. 'இதற்காகத்தான் இந்த முட்டாளை விநோதினி வீட்டைவிட்டு விலக்கி இருந்திருக்கிறாள்' என்று அவன் உறுதியாக நம்பினான்.

கண நேரங்கூடத் தாமதிக்காமல் அவன் வண்டியில் ஏறிக்கொண்டு வண்டிக்காரனை ஓட்டச் சொன்னான். குதிரை வேகமாக ஓடவில்லை என்று நடுநடுவே வண்டிக்காரனைத் திட்டவும் செய்தான். தெருவின் ஒரு வீட்டு எதிரே வண்டி நின்றபோது வெளியே பிரயாணத்துக்கு ஏற்பாடு ஒன்றையும் அங்கே காணவில்லை. ஒரு வேளை முன்னரே முடிந்துவிட்டதா என்ற ஐயமும் அவனுக்கு உண்டாயிற்று. பரபரப்புடன் கதவைத் திறந்ததுமே மகேந்திரன், "எல்லாம் சுகந்தானே!" என்றான். "ஆமாம், பாபு, எல்லாம் சுகந்தான்" என்றான் வேலையாள்.

மகேந்திரன் மேலே சென்றபோது விநோதினி குளிக்கச் சென்றிருந்தாள். அவளுடைய படுக்கையறையில், ஒன்றியாக அவள் முதல் நாளிரவு படுத்திருந்த படுக்கையில் போய்ப் படுத்தான். அந்த மெல்லிய தலையணையை இரு கைகளாலும் மார்பருகில் இழுத்து மோந்தவாறு அதில் முகம் புதைத்துக் கொண்டான். "கொடுமை! அநியாயம்" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

உள்ளத்தின் பொருமலை இவ்வாறு வெளியிட்ட பின்னர் அவன் படுக்கையைவிட்டு எழுந்து விநோதினிக்காகக் காத்

திருந்தான். அறையினுள் குறுக்கும் நெடுக்குமாக உலவும் போது ஒரு வங்கப் பத்திரிகை கீழே கிடப்பது அவன் கண்களில் பட்டது. பொழுது போக்கும் எண்ணத்துடன் அதை அவன் அலட்சியமாகக் கையில் எடுத்தபோது, அதில் விஹாரியின் பெயர் மகேந்திரனுடைய கண்களை உறுத்தியது. உடனே அவனுடைய மனம் முழுவதும் அந்தப் பத்திரிகையின்மேல் சென்றது. குறைந்த வருவாய் உள்ள ஏழைக் குமாஸ்தாக்கள் நோய்வாய்ப்பட்டால் இலவசமாக வைத்தியம், மருந்து இவைகளுக்காக விஹாரி 'பாலி' கங்கைக் கரையில் ஒரு தோட்டத்தை எடுத்திருப்பதாகவும், அங்கு ஒரே சமயத்தில் ஐந்து பேருக்கு இடம் அளிக்க ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் ஒரு நிருபர் எழுதியிருந்தார்.

விநோதினி இந்தச் செய்தியைப் படித்திருப்பாள். இதைப் படித்ததும் அவள் மனம் எவ்விதமாக எண்ணியிருக்கும்? அந்தப் பக்கந்தான் ஓடலாம் என்று எண்ணியிருக்கும் அவள் மனம். அது மட்டுமல்ல; விஹாரியின் இந்தத் தீர்மானம் விநோதினிக்குப் பின்னும் அவன்மேல் பக்தியை உண்டாக்கியிருக்கும் என்று மகேந்திரனுடைய உள்ளம் இன்னும் அதிகமாக அடித்துக்கொண்டது. உள்ளூற அவன் விஹாரியை 'சுத்த டம்பக்காரன்' என்ருன். 'இதுவும் ஒரு ஜம்பம்' என்றும் அவன் அதைக் குறிப்பிட்டான். ஜனங்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற ஜம்பம் அவனுக்குச் சின்ன வயது முதலே உண்டு என்று மகேந் சொல்லிக்கொண்டான். விஹாரியுடன் தன்னை ஒப்பு நோக்கித் தான் எல்லாவிதத்திலும் ஒளிவு மறைவு இல்லாதவன் என்று பெருமைப்பட்டுக்கொண்டான். 'தாராளம், தன்னலம் கருதாமை என்றெல்லாம் ஜம்பம் அடித்து அப்பாவி மக்களை ஏமாற்றுவதைக் கட்டோடு வெறுப்பவன் நான்' என்றும் மார் தட்டினுன். ஆனல், பரிதாபம்! ஒளிவு மறைவு இராத இவனுடைய பெருமையை ஜனங்கள் - அதிலும் முக்கியமாக ஓர் ஆள் - புரிந்துகொள்ளவில்லையே! தன் விஷயமாக ஒரு தந்திரம் செய்ததாகவே அவனுக்குத் தோன்றியது.

விநோதினி வரும் ஓசை கேட்கவே அவன் பரபரவென்று அதை மடித்துப் போட்டுக்கொண்டு அதன்மேல் அழுத்தி உட்கார்ந்தான். விநோதினி குளித்துவிட்டு உள்ளே வந்த போது மகேந்திரன் அவளுடைய முகத்தைக் கண்டு வியப்படைந்தான். அவளிடம் எத்தகைய மாறுதல் ஏற்பட்டிருந்தது! இந்தச் சில நாட்களாக அவள் நெருப்பில் தவம் புரிந்தாளா! அவள் உடல் மெலிந்திருந்தது. அந்த மெலிவையும் தாண்டி வெளுத்த முகத்தில் ஓர் ஒளி சுடர்விட்டது;

விஹாரியின் கடிதம் வரும் என்ற நம்பிக்கையை விநோதினி கைவிட்டுவிட்டாள். தன்மேல் விஹாரி கொண்டுள்ள இந்த அவமதிப்பை எண்ணி அல்லும் பகலும் மௌனமாகப் புழுங்கினாள் அவள். இந்தச் சகதியிலிருந்து விடுதலை பெற அவளுக்கு யாதொரு வழியும் புலப்படவில்லை. தன்னை வெறுத்தே விஹாரி மேற்கே யாத்திரை மேற்கொண்டான். இருப்பிடம் கண்டு பிடிக்க அவளுக்கு வழி ஏதும் தெரியவில்லை. வேலையே கண்ணாக எண்ணிச் சுறுசுறுப்புடன் அலையும் விநோதினி இச் சிறு வீட்டினுள் வேலை, எதுவுமின்றித் திணறினாள். அவளுடைய முயற்சி அவளைப் பல்வேறு விதமாக வாட்டியது.

அன்போ, வேலையோ இல்லாமல் இந்தக் களிப்பற்ற வீட்டினுள், இந்தச் சின்னச் சந்தில் வாழ்நாள் முழுவதும் அடைபட்டுக் கிடக்க வேண்டுமே என்று கற்பனை செய்து கொண்ட அவளுடைய உள்ளத்தினுள் தன் அதிருஷ்டத்துக்கு எதிராகப் புரட்சி மூண்டது. வானில் தலை முட்டிக்கொள்வது போன்ற பயனற்ற முயற்சிகள் செய்யவும் தலைப்பட்டது அவளுடைய புரட்சி மனப்பான்மை. தன்னுடைய விடுதலைக்குத் தடையாக நாலு பக்கங்களிலும் அடைத்துக்கொண்டு வாழ்வைக் குறுக்கிய மகேந்திரனிடம் விநோதினிக்கு ஏற்பட்ட வெறுப்புக்கும் பகைமைக்கும் எல்லையில்லை. அந்த மகேந்திரனை விலக்குவது இயலாத காரியம் என்றும் அவளுக்குத் தெரிந்தது தான். இச் சிறு வீட்டில் மகேந்திரன் அவளை அணுகி எதிரே உட்கார்ந்துகொள்வான்; தினமும் புலனாகாத ஒரு வசியத்துடன் அணு அணுவாக அவன் முன்னேறுவான். இந்த இருண்ட குழியில், சமூகத்தை விட்டு விலகிய வாழ்வின் சேற்றில், வெறுப்பு பிணைப்பு இவைகளின் நடுவே தினமும் போராடிக்கொண்டிருப்பது மிகவும் பயங்கரமானதல்லவா! விநோதினி தானாகப் புற்றைக் கிளறித் தன் கையால் மகேந்திரனுடைய இதயத்தின் அடிப்புரையிலிருந்து, பொறாமையென்னும் பெருநாக்குப் படைத்த பாம்பை வெளிப்படுத்திவிட்டாள்! இதன் பிடியிலிருந்து தான் தப்புவது எவ்வாறு என்று அவளுக்குத் தோன்றவில்லை.

விநோதினியின் இதயம் வேதனையில் குமைந்து கிடந்தது. இந்த இருண்ட வீட்டினுள் மகேந்திரனுடைய ஆசை அலைகள் வேறு ஓயாமல் அடித்தன. இதைக் கற்பனையில் எண்ணும்போது அவளுடைய உள்ளம் தவிப்பில் ஆழ்ந்தது. வாழ்வில் இதற்கு முடிவு எங்கே? இவைகளிலிருந்து அவள் எவ்வாறு வெளி வருவது?

விநோதினியின் மெலிந்து வெளுத்த முகம் மகேந்திர

னுடைய உள்ளத்தில் பொறாமைக் கனலை மூட்டியது. விஹாரியின் எண்ணத்திலிருந்து இந்தத் தபஸ்வினியை மீட்கப் போதுமான சக்தி அவனுக்கு இல்லையா? கழுகு பாய்ந்து வந்து, ஆட்டுக் குட்டியைத் தூக்கிப் போக முடியாத வானளாவிய மலையின்மேலும் தன் கூட்டுக்குக் கொண்டு செல்லவில்லையா? அதேபோல் தனிமையில் மகேந்திரன் தன் மென்மை பயந்த இளம் வேட்டையைத் தன் மார்பில் ஒளித்துக்கொள்ளக்கூடிய இடம் இல்லையா? பொறாமைக் கனலின் வேகம் அவனுடைய ஆசையின் தீவிரத்தை நான்கு மடங்காக்கியது. இனி ஒரு கணமாவது வினோதினியைக் கண் மறைவாக விட்டிருக்க அவனால் முடியாது. விஹாரி என்ற பயங்கரத்தை அவ்வப் போது ஒதுக்கித் தள்ள வேண்டும். அதற்கான துணிவு அவ னுக்குத் துளியளவேனும் இல்லை.

பிரிவின் வேதனை பெண்களின் அழகைப் பின்னும் அதிக மாகச் செய்கிறது என்று மகேந்திரன் ஸம்ஸ்கிருதக் கவிதை களில் படித்திருக்கிறான். வினோதினியைக் கண்டதும் அதை அவன் அநுபவிக்கத் தொடங்கவும், சுகம் கலந்த வேதனையின் தீவிரமான தாக்குதல் அவன் உள்ளத்தைக் கலக்கியது.

வினோதினி கண நேரம் கம்மென்றிருந்த பின்னர், "தேநீர் சாப்பிட்டுவிட்டு வந்தீர்களா?" என்று கேட்டாள்.

"சாப்பிட்டுவிட்டு வந்தால் என்ன! உன் கையால் இன்னொரு கோப்பை கொடுக்கக் கருமித்தனம் செய்யாதே! என் கோப்பையை நிரப்பித் தா."

வினோதினி மகேந்திரனுடைய களிப்பை வேண்டு மென்றே தடுப்பதுபோல், "விஹாரி பாபு இப்போது எங்கே இருக்கிறார், தெரியுமா?" என்றாள்.

மகேந்திரனுடைய முகம் நிமிஷத்தில் மாறியது. "அவன் இப்போது கல்கத்தாவில் இல்லையே!" என்றான்.

"அவர் விலாசம் என்ன?"

"அவன் யாருக்கும் சொல்லிவிட்டுப் போகவில்லையே!"

"விசாரித்துத் தேடினால் கிடைக்காதா?"

"எனக்கு அப்படி ஏதும் அவசியம் இல்லையே!"

"எதற்கும் அவசியம் தேவையா? இளமைமுதல் நட்பு இருந்ததில்லையா? அது போதாதா?"

"விஹாரி சின்ன வயதுமுதல் என் நண்பன்தான். ஆனால் உன்னுடன் அவன் தொடர்பு சில நாட்கள்தான். உனக்குத் தான் அவசியம் அதிகம் போல் இருக்கிறது!"

"அதைப் பார்த்தாவது உங்களுக்குக் கூச்சமாக இல்லையா? நட்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை அத் தகைய நண்பரிடமிருந்துகூடக் கற்றுக்கொள்ளவில்லையா?"

''அதற்காக அவ்வளவு நான் கவலைப்படவில்லை. ஆனால் ஏமாற்றிப் பெண்களின் மனத்தைக் கவருவது எவ்வாறு என்ற வித்தையை அவனிடம் கற்றுக்கொண்டிருந்தாலும் இப்போது உபயோகமாக இருக்கும்.''

''ஆசைப்பட்டால்மட்டும் அதைக் கற்றுக்கொள்ள முடியுமா? திறமை வேண்டாமா?''

''குருவின் விலாசம் உனக்குத் தெரிந்தால் சொல்லி விடேன். அவரிடம் போய் மந்திரம் கற்று வருகிறேன். திறமையை அப்போது சோதிக்கலாம்.''

''நண்பரின் விலாசத்தைக் கண்டு பிடிக்க முடியா விட்டால், காதல் என்ற பேச்சையே என்னிடம் எடுக்க வேண்டாம். விஹாரி பாபுவிடம் நீங்கள் நடந்துகொண்டதைக் கவனித்தபின் யார்தான் உங்களை நம்புவார்கள்?''

''என்மேல் முழு நம்பிக்கை இருந்தால் என்னை இவ்வாறு அவமானம் செய்யத் துணிவிராது உனக்கு. என் காதலில் சிறிதாவது உனக்கு அவநம்பிக்கை மூண்டிருந்தால் இன்று எனக்கு இவ்வளவு தாங்க முடியாத வேதனை ஏற்பட்டிராது. வசமாகாமல் தப்பும் விஹாரிக்கு வித்தை தெரியும். அதை இந்தத் துரதிருஷ்டசாலிக்குக் கற்றுக் கொடுத்திருந்தால் நண்பனுக்கு ஏற்ற உதவி செய்ததாக எண்ணலாம்.''

''விஹாரி பாபு மனிதர்; அதனால்தான் அவர் அப்படி வசப்படாமல் இருக்க முடிகிறது'' என்று விநோதினி தலைமயிர் முதுகில் புரளச் சாளரத்தின் அருகிலேயே நின்றாள். மகேந்திரன் திடீரென்று எழுந்து முஷ்டியைக் குவித்தவாறு கோபத்துடன் உறுமினான். ''என்னை இப்படித் திரும்பத் திரும்ப அவமானம் செய்ய எப்படித் துணிவு வருகிறது உனக்கு? இத்தனை அவமதிப்புக்கும் பலன் உனக்குக் கிடைக்கவில்லை என்றால், அது உன் திறமையினாலா அல்லது என் நல்ல மனசு காரணமாகவா? என்னை மிருகமென்றே எண்ணியிரு. ஆனால் இது துஷ்ட மிருகம் என்பதை மறவாதே! ஒரே அடியாகத் தாக்கத் தெரியாத மிருகம் என்று என்னை எண்ணிவிடாதே'' என்று அவன் அவளுடைய முகத்தையே கணநேரம் பார்த்து நின்றான். பின்னர் அவன், ''விநோத்! இங்கிருந்து வந்துவிடு. நாம் வெளியே போய்விடலாம். மேற்கேயோ, மலைகளுக்கோ, உனக்கு எங்கு விருப்பமோ போகலாம். இங்கு உயிருடன் இருக்க இடம் இல்லை. நான் சாகிறேன் இங்கு'' என்றான்.

''வாருங்கள், இப்போதே மேற்கே கிளம்பிவிடலாம்.''

''மேற்கே எங்கே போவது?''

''எங்கேயும் இல்லை; ஓரிடத்தில் இரண்டு நாட்கள் தங்கக் கூடாது; சுற்றித் திரியலாம்.''

''அதுவும் நல்லது, இன்றிரவே போகலாம்.''

விநோதினி ஒப்புக்கொண்டதும், மகேந்திரனுக்காக உணவு சமைக்கச் சென்றாள்.

விஹாரியின் செய்தி விநோதினியின் கண்களில் படவில்லை என்பதை மகேந்திரன் கண்டுகொண்டான். செய்தித் தாளில் மனத்தைச் செலுத்துமளவுக்குக் கவனம் அவளிடம் இல்லை. இந்தச் செய்தி அவளுக்குப் பின்னர்த் தெரியுமோ என்ற அச்சத்தில் அன்று முழுவதும் அவன் கவலையுடன் விழித்திருந்தான்.

45

விஹாரியைப்பற்றி விசாரித்துக்கொண்டு மகேந்திரன் திரும்பி வருவான் என்று எண்ணி வீட்டில் அவனுக்காக உணவு தயாராகிக் கொண்டிருந்தது. நேரம் ஆவதைக் கண்டு நோயுற்ற ராஜலட்சுமி கவலைப்படலானாள். இரவெல்லாம் தூங்காமல் மிகவும் சோர்ந்திருந்த அவள், மகேந்திரனுக்காக வேறு கவலைப்படுவது கண்டு ஆசா விசாரித்தபோது, மகேந்திரனுடைய வண்டி வந்துவிட்டது தெரிந்தது. வண்டிக் காரனைக் கேட்டதில் விஹாரியின் வீட்டிலிருந்து மகேந்திரன் படல்டாங்கா வீட்டிற்குச் சென்றதாக அவன் சொன்னான். அதைக் கேள்வியுற்ற ராஜலட்சுமி சுவரின் பக்கம் திரும்பிப் படுத்தாள். ஆசா, அவளுடைய தலைமாட்டில் கண்ணாடி பதுமை போல் உட்கார்ந்து விசிறினாள். மற்ற நாட்களில் சாப்பிடச் சொல்லி ஆசாவை வற்புறுத்தும் ராஜலட்சுமி அன்று எதுவும் சொல்லவில்லை. முதல் நாளிரவு தன் கடுமையான நோயைக் கண்டும் மகேந்திரன் விநோதினியின் ஆசையால் ஓடியதன் பின்னர் அவளுக்கு உலகில் எதைப்பற்றியும் கேட்பதிலோ, முயற்சி செய்வதிலோ, ஆசைப்படுவதிலோ பயனில்லை என்றே தோன்றிவிட்டது. தன் நோயை அவன் மிகவும் சாதாரணமாக எண்ணியிருக்கிறான்; மற்றச் சமயங்கள் போல் இம்முறையும் தானாகவே குணமாகிவிடும் என்று அவன் கவலையற்று இருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது. ஆனால் அந்தக் கவலையற்ற போக்கு அவளுக்கு மிகக் கடுமையாகப் பட்டது. காமவெறியில் அவன் எந்தவிதமான கடமைக்கோ, கவலைக்கோ மனத்தில் இடமும் அளிக்க விரும்பவில்லை. தாயின் நோயையும் கஷ்டத்தையும் மிகவும் சாதாரணமாகவே நினைத்

தான். தாயின் படுக்கையறையில் கட்டுண்டு கிடக்கப் பயந்து அவன் வெட்கமின்றிச் சிறிதளவு ஓய்வு கிடைக்கவும், விநோதினியிடம் ஓடிவிட்டான். உடல்நோய் தீரவேண்டும் என்ற ஆசை ராஜலட்சுமிக்குச் சிறிதளவும் இராமல் போய் விட்டது. மகேந்திரன் கவலைப்படாமல் இருப்பது தவறு என்பதை ரோஷத்துடன் ருசுப்பிக்க முனைந்தாள்.

மணி இரண்டிருக்கும்போது ஆசா உள்ளே வந்தாள். ''அம்மா! மருந்து சாப்பிட நேரமாகிவிட்டது'' என்றாள். ராஜலட்சுமி பதில் ஒன்றுமே சொல்லவில்லை. ஆசா மருந்து கொண்டுவர எழுந்தபோது அவள், ''மருந்து வேண்டாம். நீ போ!'' என்றாள்.

ஆசாவுக்கு அவளுடைய ரோஷம் புரிந்தது. அந்த ரோஷம் மிகவும் தீவிரமாக அவளுடைய உள்ளத்தைத் தாக்கவே, ஆசாவினால் அதற்குமேல் இருக்க முடியவில்லை. அழுகையை அடக்கப்போய் விம்மினாள். ராஜலட்சுமி மெல்ல ஆசாவின் பக்கம் திரும்பி அவளுடைய கையைத் தன் கரத்தால் தடவினாள்; ''அம்மா! நீ சின்னப் பெண். இன்னும் சுகம் காண உனக்குப் பொழுது இருக்கிறது. எனக்காக நீ இனிக் கஷ்டப்படாதே, அம்மா. நானும் எத்தனையோ நாட்கள் வாழ்ந்தாகிவிட்டது. எதற்காக இன்னும் உயிருடன் இருக்க வேண்டும்?'' என்றாள்.

இதைக் கேட்ட ஆசாவின் விம்மல் அதிகமாகியது. அவள் வாயைப் புடைவைத் தலைப்பினால் அழுத்திக்கொண்டாள்.

இவ்வாறு நோயாளியின் வீட்டில் அன்றைய தினம் வேதனையுடன் மெல்லக் கழிந்தது. அந்த ரோஷத்தினிடையிலும் அந்த இருவரின் உள்ளத்தில் மகேந்திரன் வந்துவிடுவான் என்ற நம்பிக்கை இருந்தது. ஓசை கேட்கும்போதெல்லாம் அவர்களுடைய உடலில் ஒரு சிலிர்ப்புத் தோன்றுவதை இருவருமே உணர்ந்தார்கள். மெல்ல அந்தி மங்கியது. பின் கட்டில் மாலையின் மங்கிய ஒளியில் மலர்ச்சியில்லை; மறைக்க இருளின் போர்வையுமில்லை. அது வேதனையை மிகவும் கடினமாக்கும்; ஏமாற்றத்தையும் வறண்ட வேதனையாக மாற்றும் தன்மையுடையது; வேலைகளையும், அவை மூலம் மறதியைத் தேடிக்கொள்ளும் பலத்தையும் அது போக்கடித்து விடுகிறது. ஓய்வு, தியாகம் இவற்றால் பிறக்கும் அமைதியையும் அது தருவதில்லை. வறண்ட அந்திப் பொழுதில் அந்த அறையினுள் ஆசா ஒரு விளக்கை ஏற்றிக் கொணர்ந்து வைத்தாள். ராஜலட்சுமி, ''அம்மா, விளக்கு எனக்குப் பிடிக்கவில்லை. வெளியே எடுத்துப் போ'' என்றாள்.

ஆசா விளக்கை வெளியே எடுத்துச் சென்று வைத்து

விட்டு வந்தாள். இருட்டுச் சற்றுக் கனத்து அறையினுள்ளிருந்து வெளியிலும் பரவியது: ஆசா ராஜலட்சுமியிடம் மெல்ல, ''அம்மா, அவருக்குச் சொல்லி அனுப்பட்டுமா?'' என்றாள்.

ராஜலட்சுமி உறுதியாக, ''வேண்டாம், அம்மா. உன் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்: மகேந்திரனுக்குச் சொல்லி அனுப்பவேண்டியதில்லை'' என்றாள்.

இதைக் கேட்ட ஆசா வாய் திறக்கவில்லை. அதற்குமேல் அழக்கூட அவளுக்குச் சக்தியில்லை. வெளியே வேலைக்காரன் வந்து, ''அம்மா, பாபுவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது'' என்றான்.

இதைக் கேட்ட ராஜலட்சுமிக்கு, 'மகேனுக்குத் திடீரென்று ஏதாவது உடம்போ? அதுதான் வர முடியாமல் கடிதம் எழுதியிருக்கிறானோ?' என்று தோன்றியது. குரலில் வருத்தமும் பரபரப்பும் தொனிக்க அவள், ''பாரம்மா, அவன் என்ன எழுதியிருக்கிறான், பார்!'' என்றாள்.

ஆசா கைகள் நடுங்க, வெளியே இருந்த விளக்கின் ஒளியில் கடிதத்தைப் படித்தாள். 'சில நாட்களாக உடம்பு சரியாக இல்லை. அதனால் மேற்கே பிரயாணம் மேற்கொண்டிருக்கிறேன்' என்று அவன் எழுதியிருந்தான். அம்மாவின் உடம்பைப்பற்றி அதிகம் கவலைப்பட அவசியம் இல்லை. அவளைச் சரிவரக் கவனித்துக்கொள்ளும்படி அவன் நவீன் டாக்டரிடம் சொல்லியிருந்தான். இரவில் தூக்கம் வராவிட்டாலோ, தலை வலித்தாலோ என்ன செய்வது என்றும் அவன் கடிதத்தில் எழுதியிருந்தான். இரண்டு டப்பாக்களில் சுலபமாக ஜீரணிக்கக் கூடிய மருந்துகளையும் மருந்துக் கடையிலிருந்து வாங்கிக் கடிதத்துடன் அனுப்பியிருந்தான். தாற்காலிகமாக கிரிதி விலாசத்துக்குத் தாயின் உடம்பைப்பற்றி அவசியம் தெரிவிக்கும்படி பிற்குறிப்பில் எழுதியிருந்தான் மகேந்திரன்.

இந்தக் கடிதத்தைப் படித்த ஆசா திகைப்புற்று நின்றாள். அவளுடைய வேதனையையும் மீறிக்கொண்டு வெறுப்புத் தலை தூக்கியது. இந்தக் கொடிய செய்தியை அம்மாவிடம் எவ்வாறு சொல்வது?

ஆசா நேரமாக்குவது கண்டு ராஜலட்சுமிக்குக் கவலை அதிகரித்தது. ''அம்மா, மகேன் என்ன எழுதியிருக்கிறான்! சீக்கிரம் சொல்'' என்று அவள் ஆவலுடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள்.

ஆசா மெல்ல உள்ளே வந்து கடிதம் முழுமையும் படித்துச் சொன்னாள். ''உடம்பைப்பற்றி மகேன் என்ன எழுதியிருக்கிறான்? அந்த இடத்தை மட்டும் படி'' என்றாள் ராஜலட்சுமி.

ஆசா மீண்டும் படித்தாள்: 'சில நாட்களாக எனக்கு உடம்பு சரியாக இல்லை. அதனால் நான்..'

''போதும்; போதும். மேலே படிக்க வேண்டாம். அப்படித் தான் அவனுக்கு இருக்கும்! கிழட்டுத்தாய் சாகவும் இல்லை; வைத்துக்கொண்டு எரிச்சல் மூட்டுகிறாளல்லவா! நீ என் உடம்பைப்பற்றி ஏன் மகேந்திரனுக்குச் சொன்னாய்? வீட்டிலே அறையின் மூலையிலே படித்துக்கொண்டிருந்தான்! எவருடனும் ஒரு வம்பு தும்பு வைத்துக்கொள்ளவில்லை. நடுவில் போய் அம்மாவுக்கு உடம்பு என்று கிளப்பி அவனை வீட்டை விட்டு விரட்டியதில் உனக்கு என்ன சுகம்? நான் இங்கே செத்தால்தான் யாருக்கு என்ன குறைந்து போகும்? இவ்வளவு கஷ்டப்பட்டும் உனக்குப் புத்தி வரவில்லையே!'' என்றதும் ராஜலட்சுமி படுக்கையில் படுத்தாள்.

வெளியே பூட்ஸின் ஓசை கேட்டது. வேலைக்காரன், ''டாக்டர் பாபு வந்திருக்காங்க'' என்றான்.

டாக்டர் ஒரு முறை கனைத்துவிட்டு அறையின் உள்ளே வந்தார். ஆசா பரபரவென்று முகக்கை இழுத்துவிட்டுக் கொண்டு கட்டிலின் மறைவில் நின்றாள். ''உங்களுக்கு என்ன உடம்பு, சொல்லுங்கள்'' என்றார் டாக்டர்.

ராஜலட்சுமி கோபத்துடன், ''என்ன உடம்பு! மனுஷ்யனைச் சாகக்கூட விட மாட்டீர்களா? உங்கள் மருந்தைத் தின்றால் சிரஞ்சீவியாகிவிடுவேனா?'' என்றாள்.

டாக்டர் ஆறுதல் கூறும் குரலில், ''சிரஞ்சீவியாகா விட்டாலும் கஷ்டத்தைக் குறைக்க ஏதோ..'' என்று ஆரம்பித்தார்.

''கஷ்டங்களுக்கெல்லாம் முன்பு நல்ல மருந்து இருந்தது; அப்போது விதவைகள் உடன்கட்டையேறிச் சாவார்களாம்; இப்போது கட்டுண்டு சாக அடிப்பதுதான் மிச்சம். போங்கள் டாக்டர் பாபு, எனக்கு வீணாக எரிச்சல் மூட்டாதீர்! எனக்குத் தனிமைதான் வேண்டும்.''

டாக்டர் தயங்கியவாறு, ''உங்கள் நாடியை ஒரு தடவை..'' என்றார்.

ராஜலட்சுமிக்கு எரிச்சல் அதிகமாகியது; ''போம் என்றால்..! என் நாடி நன்றாகத்தான் இருக்கிறது. இது சீக்கிரம் தளரும் என்ற நம்பிக்கை இல்லை'' என்றாள்.

டாக்டர் வேறு வழியின்றி வெளியேறி ஆசாவைக் கூப்பிட்டனுப்பினார்; அவளிடம் நவீன டாக்டர் வியாதியின் வரலாறுகளைக் கேட்டுக்கொண்டார். விஷயங்களை முற்றும் தெரிந்துகொண்ட பின்னர் மீண்டும் அவர் அறையினுள் நுழைந்தார்; ''இதோ பாருங்கள்: மகேந்திரன் உங்கள்

பொறுப்பு முழுவதையும் என்னிடம் விட்டுச் சென்றிருக்கிறான். உங்களுக்கு வைத்தியம் பார்க்க என்னை விடாவிட்டால், அவன் மனம் கஷ்டப்படும்'' என்றார்.

மகேந்திரனுடைய மனம் கஷ்டப்படும் என்ற சொல் ராஜலட்சுமிக்குக் கேலிச் சொல்லாகப் பட்டது, ''மகேனுக்காக நீர் கவலைப்பட வேண்டியதில்லை. உலகில் எல்லாரும் கஷ்டம் அநுபவிக்க வேண்டியதுதான். இந்தக் கவலை மகேனை அதிக மாகப் பாதிக்காது. நீர் போகலாம். என்னைச் சற்றுத் தூங்க விடுங்கள்!'' என்றாள் அவள்.

'நோயாளிக்கு எரிச்சல் அளிப்பது கூடாது என்று டாக்டருக்குத் தெரியும். அவர் மெல்ல வெளியே வந்து ஆசாவிடம் செய்யவேண்டிய கடமைகளைக் கூறிச் சென்றார்.

ஆசா உள்ளே நுழைந்ததும் ராஜலட்சுமி, ''நீ போய்ச் சற்று ஓய்வெடுத்துக்கொள், அம்மா! நாளெல்லாம் நோயாளியுடன் இருந்துவிட்டாய். ஹாருவின் அம்மாவைக் கூப்பிடு. பக்கத்து அறையில் அவள் இருக்கட்டும்'' என்றாள்.

ஆசா ராஜலட்சுமியை நன்கு அறிவாள். இது அன்புக் கட்டளை அல்ல; இது அதிகார பூர்வகமான உத்தரவு. ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை: ஹாருவின் அம்மாவை அனுப்பி விட்டு இருளில் தன் அறையினுள் சில்லென்ற தரையில் ஆசா படுத்துக்கொண்டாள்.

அன்றெல்லாம் பட்டினி இருந்தும் கஷ்டமும் புட்ட அவள் உடம்பு களைத்துக் கிடந்தது. அந்தப் பேட்டையில் ஒரு வீட்டில் நடுநடுவே கல்யாண மேளம் வாசித்தது. இதே சமயம் மறுபடியும் அது தொடங்கியது: அந்த இசையினால் அசைவுற்ற இருட்குவை ஆசாவை அடுத்தடுத்துத் தாக்குவது போல் இருந்தது. அவளுடைய விவாக தினத்தன்று நிகழ்ந்த நுண்ணிய வரலாறுகள் உயிர் பெற்று இருண்ட வானில் கனவுச் சித்திரங்களாக நிறைந்தன. அன்றைய பிரகாசமான ஒளி, கூட்டம், கலகலப்பு, மாலை மாற்றுதல், புது உடைகள், ஹோமத் தீயின் மணம், ஐயம், நாணம், களிப்பு மூன்றும் கலந்த இதயத்தின் துடிப்பு யாவும் நினைவுத் திரையில் தோன்றி அவளை வருத்தின: அத்துடன் உள்ளத்தின் வேதனையும் பன்மடங்கு வலுப்பெற்றது. பஞ்ச காலத்தில் பசிவாய்ப்பட்ட சிறுவன் உணவுக்காகத் தாயைத் தாக்குவது போல், விழித்தெழுந்த அவ்வின்ப நினைவுகள் தங்கள் உணவுக்காக அவளுடைய மார்பைத் தாக்கின. அதற்குமேல் அவளால் படுத்திருக்க முடியவில்லை: கரம் குவித்துக் கடவுளை வேண்டச் சென்றபோது உலகில் தனக்கென்று கண்கண்ட தெய்வமாக விளங்கும் தூய்மையும் குளிர் நோக்கும் கொண்ட

பெரியம்மாவின் உருவம் ஆசாவின் கண்ணீர் மல்கிய இதயத்தினுள் எழுந்தது. குடும்பத்தின் கஷ்ட நிஷ்டுரங்களுக்கு நடுவே அந்தத் தவமகளை அழைக்கக் கூடாது என்று இது காறும் அவள் சபதம் செய்துகொண்டிருந்தாள். ஆனால் இப்போது அவளுக்கு வேறு வழியே தோன்றவில்லை. அவளைச் சுற்றிலும் கவிந்துள்ள கனத்த துயரச் சுழலில் சிறிதேனும் இடைவெளியும் காணவில்லை. ஆகவே, அவள் அறையினுள் விளக்கேற்றி மடியின்மேல் காகிதத்தை வைத்துக் கொண்டு கண்ணீரைத் துடைத்தவாறு எழுதலானாள்:

''பெரியம்மா, உன்னைத் தவிர இன்று எனக்கு எவரும் இல்லை. ஒரு முறை வந்து உன் மடியில் இந்தத் துரதிருஷ்ட சாலியை ஏற்றுக்கொள். இராவிட்டால் நான் எப்படி உயிர் வாழ்வேன்? இன்னும் என்ன எழுதுவது என்று விளங்கவில்லை. உன் பாதங்களில் நமஸ்காரங்கள்.

உன் அன்புள்ள,
சுனி.''

46

அன்னபூரணி காசியிலிருந்து வந்ததும் மெல்ல ராஜலட்சுமியின் அறையினுள் போய் அவளை வணங்கிப் பாத தூளியைத் தலைமேல் வைத்துக்கொண்டாள். நடுவே நிகழ்ந்த பகை, பிரிவுச் சச்சரவுகள் இவற்றை மறந்து ராஜலட்சுமி அன்னபூரணியைக் கண்டதும் இழந்த பொருளைப் பெற்றது போல் மகிழ்ந்தாள். உள்ளூற மனம் தன்னை அறியாமலேயே அன்னபூரணியின் வருகையை எதிர்பார்த்தது. அன்னபூரணியைக் கண்டதும் தெளிந்தது. பல நாட்களாகத் தான் அநுபவித்த கஷ்டம், கவலை எல்லாம் அன்னபூரணி இராத குறையால்தான் உண்டானவை என்று அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. கணப்பொழுதில் அவளுடைய வதங்கிய இதயம் பழையபடி ஆகிவிட்டது. மகேந்திரன் பிறக்கு முன்னர் இரு ஓரகத்திகளும் மருமகளிராக இந்தக் குடும்பத்தின் சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொள்ள வந்தனர். பூஜை, விழாக்கள், வருத்தம், பிரிவு எல்லாவற்றிலும் சமமாகக் கலந்து பழகிய அந்த நட்புப் பல நாட்கள் கழிந்தபின்னர் ராஜலட்சுமியின் உள்ளத்தை நிறைத்தது. பல காலங்களுக்கு முன் வாழ்வின் தொடக்கத்தில் பங்கு கொண்ட துணைவி மீண்டும் நோய்ப்

படுக்கையில் பக்கத்தில் கூடினுள். பழைய நாட்களின் இன்ப துன்பங்களுக்கும் நல்ல நிகழ்ச்சிகளுக்கும் ஒரு நினைவுத் திரை யாக விளங்கினுள் அன்னபூரணி. எவன் பொருட்டு அன்ன பூரணியை ராஜலட்சுமி கடுமையாக எதிர்த்தாளோ, அவன் தான் இன்று எங்கே இருக்கிருன்!

அன்னபூரணி நோயாளியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளுடைய வலது கையைத் தன் கரங்களுள் எடுத்துக் கொண்டாள்; ''அக்கா!'' என்ருள்.

''அன்னம்....'', என்ருள் ராஜலட்சுமி. அதற்குமேல் பேச அவளுக்கு நா எழவில்லை. கண்களிலிருந்து நீர் பலபல வென்று உதிர்ந்தது. ஆசாவுக்கு இந்தக் காட்சியைக் காணத் தாங்கவில்லை. பக்கத்து அறையினுள் போய் உட்கார்ந்து அழுதாள்.

ராஜலட்சுமி, ஆசா இவர்களிடம் மகேந்திரனைப்பற்றிக் கேட்க அன்னபூரணிக்குத் துணிவில்லை. ஸாதுசரணரை அவள் அழைத்தாள். ''மாமா! மகேன் எங்கே?''

ஸாதுசரணர் மகேந்திரன், வினோதினியினுடைய விவரங் களை எல்லாம் ஆதியோடந்தம் தெரிவித்தார். ''விஹாரியின் விஷயம் ஏதாவது தெரியுமா?'' என்று அன்னபூரணி கேட்டாள்.

''பல நாட்களாக அவன் வரவில்லை. என்ன விஷயமோ சரியாகத் தெரியாது.''

''ஒரு தடவை விஹாரியின் வீட்டுக்குப் போய் விஷயம் தெரிந்துகொண்டு வாருங்கள்.''

ஸாதுசரணர் போய்த் திரும்பி வந்தார். ''அவன் வீட்டில் இல்லை. பாலியில் கங்கைக்கரையில் தோட்டத்தில் இருக்கிருனும்'' என்ருர்.

அன்னபூரணி நவீன் டாக்டரை அழைத்து நோயாளியின் நிலையைத் தெரிந்துகொண்டாள். இதயத்தின் பலவீனத் துடன் வயிற்று வலியும் சேர்ந்துகொண்டு விட்டது. மரணம் எப்போது வேண்டுமானுலும் நேரலாம், ஒன்றும் சொல்ல முடியாதென்ருர் டாக்டர்.

சாயங்காலமாக ஆக ராஜலட்சுமியின் நோய் அதிகமாவது கண்டு அன்னபூரணி, ''அக்கா, நவீன் டாக்டரைக் கூப் பிடட்டுமா?'' என்ருள்.

''வேண்டாமடி, நவீன் டாக்டரால் எனக்கு ஒன்றும் செய்ய முடியாது'' என்ருள் ராஜலட்சுமி.

''பின், யாரைக் கூப்பிட வேண்டும், சொல்.''

''ஒருதடவை விஹாரியை வரச்சொன்னுல் நல்லது.''

அன்னபூரணியின் மனம் வேதனைப்பட்டது. அன்றொரு

நாள் வெளியூரில் இருளில் அவள் வாசலிலேயே விஹாரியை அவமதித்து விரட்டினுள். அந்த வேதனையை அவள் என்றும் மறக்கவில்லை. விஹாரி இனி, அவள் வாயிலைத் தேடி வரமாட்டான். இவ்வாழ்வில் அந்த அவமதிப்புக்குப் பரிகாரம் செய்ய முடியுமென்று அவள் உள்ளம் சற்றும் நம்பிக்கை கொள்ளவில்லை.

அன்னபூரணி மாடியில் மகேந்திரனுடைய அறைக்குச் சென்ருள். வீட்டினுள் இந்த இடந்தான் அவளுக்குக் களிப் பின் உறைவிடமாக இருந்தது. ஆனுல் அந்த அறையின் களையே இன்று இல்லை. படுக்கைகள் தாறுமாருகக் கிடந்தன. மாடிப் பூந்தொட்டிகளுக்கு நீர் ஊற்றுவார் எவருமின்றிச் செடிகள் உலர்ந்து கிடந்தன. அறையே 'பொலிவிழந்து தோன்றியது.

பெரியம்மா மாடிக்குச் சென்றதை உணர்ந்த ஆசா மெல்ல அவளைப் பின்தொடர்ந்தாள். அன்னபூரணி அவளை மார்புறத் தழுவி உச்சி மோந்தாள். ஆசா மண்டியிட்டு அவள் பாதங்களைப் பன்முறை தொட்டுத் தொட்டு வணங் கினுள். "பெரியம்மா, எனக்கு ஆசி கொடு; பலம் கொடு. மனிதனுக்கு இத்தனை கஷ்டம் வரும் என்று நான் எப்போதும் எண்ணியதில்லை, அம்மா! இன்னும் எவ்வளவுதான் பொறுக்க முடியும்?" என்ருள் ஆசா.

அன்னபூரணி அங்கேயே தரையில் உட்காரவும், ஆசா அவளுடைய காலடியில் படுத்துவிட்டாள். அன்னபூரணி ஆசாவின் தலையை மடியில் வைத்துக்கொண்டதும், வாய் திறவாமல் கரங்குவித்துத் தெய்வத்தை நினைக்கலானுள்.

அன்னபூரணியின் அன்பு நிறைந்த மோனம் ஆசிபோல் ஆசாவின் உள்ளத்தின் உட்புரையினுள் நுழைந்து பல நாட் களுக்குப் பின்னர் அமைதியை எழுப்பியது. தன் எண்ணம் நிறைவேறிவிட்டது போல் அவளுக்குத் தோன்றியது. தன்னைப்போன்ற முட்டாளைத் தெய்வம் ஒதுக்கித் தள்ளி னுலும், பெரியம்மாவின் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளா மல் இருக்க முடியுமா?

உள்ளத்தில் ஆறுதலும் பலமும் பெற்ற ஆசா, வெகு நேரம் பொறுத்து நீண்ட பெருமூச்சுடன் எழுந்து உட்கார்ந்து கூறினுள்: "பெரியம்மா! விஹாரி பாபுவை வரச்சொல்லி ஒரு கடிதம் எழுதேன்."

"கடிதம் எழுதப்போவதில்லை."

"பின் அவருக்கு எப்படிச் செய்தி அனுப்புவது?"

"நாளை நானே விஹாரியைக் காணப்போகிறேன்" என்ருள் அன்னபூரணி.

47

விஹாரி மேற்கே அலைந்துகொண்டிருந்தபோது, தனக்கென்று ஏதாவது வேலை தொடங்கினாலொழிய மனம் அமைதியுறாது என்று அவனுக்குத் தோன்றியது. அதே நினைவாகக் கல்கத்தா வந்ததும் அவன் ஏழைக் குமாஸ்தாக்களின் சிகிச்சை, சேவைகளின் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். வெயில் நாளில் குட்டையில் இருக்கும் மீன் எஞ்சி நிற்கும் சேற்றுநீரில் வற்றித் தவிப்பதுபோன்றதுதான் சொற்ப வருவாயுள்ள குடும்பத்துடன் சிறு சந்துகளில் வசிக்கும் குமாஸ்தாக்களின் நிலையும். வாடி வதங்கிக் கவலைப்பட்டு உழலும் அந்தப் 'பெரிய மனிதர்'களிடம் விஹாரிக்கு வெகு நாட்களாகவே கருணை உண்டு. அவர்களுக்கு மரத்தின் நிழலும், கங்கைக் கரையில் தூய காற்றும் தானம் அளிக்கத் தீர்மானித்தான் விஹாரி.

பாலியில் தோட்டம் எடுத்துக்கொண்டதும் சீனு மேஸ்திரியின் உதவியுடன் சின்னஞ்சிறு குடில்களை எழுப்பும் பணியைத் தொடங்கினான் விஹாரி. ஆனால் அவன் மனம் அமைதி பெறவில்லை. வேலையில் ஈடுபடும் நாள் நெருங்க நெருங்க, மனம் கொண்ட தீர்மானத்திலிருந்து வேறுபடத் தொடங்கியது. 'இந்த வேலையில் நிம்மதி இராது. இதில் சுவையில்லை; பொலிவுமில்லை. இது வெறும் வறட்டுச் சுமைதான்' என்று மனம் அடித்துச் சொல்லியது. வேலையின் எண்ணம் இதுவரை விஹாரியை இவ்வாறு வாட்டியதில்லை.

விஹாரிக்குத் தேவை என்று எதுவுமே இராத காலமும் இருந்தது. எதிரே எது கிடைத்தாலும் போதும்; அநாயாசமாக அவன் அதில் ஈடுபட்டுவிடுவான். இப்போதோ, அவன் மனத்தினுள் ஒரு பசி தலை தூக்கியது. அதைத் திருப்திப்படுத்தாமல் வேறு எதிலும் மனம் ஈடுபட மறுத்தது. முன்போல் அவன் ஒவ்வொன்றையும் எடுத்து ஆராய்ந்தான். மறுகணமே அதையெல்லாம் துறந்துவிட்டு விடுதலை பெற அலைபாயும் அவன் நெஞ்சம்.

விஹாரியினுள் நிம்மதியாக உறங்கியிருந்தது இளமையின் பெருக்கு. அதைப்பற்றி அவன் எண்ணியதுமில்லை. அது விநோதினியின் பொன்கரம் பட்டு விழித்துக்கொண்டது. அப்போதுதான் பிறந்த கருடன்போல் அது தன் இரையைத் தேடி உலகெங்கும் அலையத் தொடங்கியது. அந்தப் பசித்த உயிருடன் இதுவரை விஹாரி பழக்கப்பட்டவனல்ல. அது அவனை அலைக்கழித்தது. அற்பாயுசுகளாக உழலும் கல்கத்தா குமாஸ்தாக்களை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்வது?

எதிரே ஆடிப் பெருக்குடன் ஓடியது கங்கையாறு. கார் முகில்கள் நடுநடுவே எதிர்க் கரையில் அடர்ந்திருந்த மரங் களின்மேல் கவிந்துகொள்ளும். ஆற்றின் பெருக்கும் உருக்கு இரும்பினால் செய்த வாள்போல் சில இடங்களில் கருமையாகத் தோன்றும்; சில இடங்களில் தீயைப்போல் பளிச்சென்று தெரியும். புது மழையின் இந்தக் கொண்டாட்டம் விஹாரி யின் கண்களில் படும்போதெல்லாம், அவனுடைய இதயத்தின் கவாடத்தைத் திறந்துகொண்டு வானத்தின் தண்ணிய நீல வண்ணத்தினிடையே யாரோ தனிமையாக வந்து நிற்பது போல் இருந்தது. குளித்தபின் அடர்ந்து அலைபோல் இருக்கும் அவனுடைய கடுமையான தலைமயிரை யாரோ தொடுவது போல் இருக்கும்; சிதறிக் கிடந்த வானின் கிரணங்களையெல் லாம் ஒன்று கூட்டி யாரோ கண் கொட்டாமல் பரிதாபமாகத் தன் முகத்தையே நோக்குவதுபோல் அவனுக்குத் தோன்றியது.

சுகமும் அமைதியுமாக முன்பு கழித்த காலம் இப்போது விஹாரிக்குக் குறைவென்றே பட்டது. இப்படி எத்தனையோ மேகம் கவிந்த அந்திப் பொழுதுகள், நிறைமதி இரவுகள் அவன் வாழ்வில் வந்து போயின. அமுதம் நிறைந்த பாத்திரத் துடன் அவை அவனுடைய இதயக் கதவருகே வந்து கம்மென்று திரும்ப வேண்டியிருந்தது. கிடைக்க முடியாத அந்தச் சுப நோக்கங்களில் எத்தனை இசைகள் தொடங்காமல் நின்றனவோ, எத்தனை விழாக்கள் முடிவின்றி மங்கினவோ, இவற்றிற்கு ஓர் அளவில்லை. விஹாரியின் பழைய நினைவுகளை எல்லாம், விநோதினி தான் கொடுக்கவந்த ஒரே முத்தத்தின் மூலம் ஒன்றுமே இராமல் செய்துவிட்டாள். அவற்றில் இன்று ஒருவிதப் பற்றுதலும் அவனுக்கு இல்லை. மகேந்திரனின் நிழலைப்போல் விஹாரி இதுவரை எப்படித்தான் காலங் கழித்தானோ? அதனால் ஏதாவது பலன் அவனுக்குக் கிடைத்ததா? காதலின் தவிப்பினால் வானம், நீர், வையம் இவற்றின் நடுவிலிருந்து இவ்வாறு ஓர் இசை கிளம்பும் என்று அந்த அப்பாவி விஹாரி இதுவரை அநுமானங்கூடச் செய்தவ னல்ல. தன் இரு கரங்களால் அணைத்து அவனை ஒரு கணத்தில் இந்த அபூர்வமான ஒளி உலகுக்குக் கொணர்ந்த விநோ தினியை அவனால் எப்படி மறக்க முடியும்? அவளுடைய பார்வையும் ஆவலும் இன்று எங்கும் நிறைந்து தோன்றின. வேதனை நிறைந்த அவளுடைய பெருமூச்சு விஹாரியின் உதிரத்தினுள் அலையெழுப்பியவாறு இருந்தது. அவளுடைய பரிசத்தின் இளவெம்மை விஹாரியை அணைத்தவாறு அவ னுடைய இதயத்தைச் சிலிர்க்கச் செய்தது.

இருந்தும், அவன் விநோதினியைவிட்டு இவ்வளவு

தொலைவில் விலகி நிற்பானேன்? விஹாரிக்கு விநோதினி அளித்த இன்பச் சுவையை உலகிலிருந்துகொண்டே அவளுடன் எந்தத் தொடர்புகொண்டு அநுபவிப்பது என்று அவனால் நினைக்க முடியவில்லை. தாமரை மலரைப் பறிக்கச் சென்றால் சேறுதான் எழுந்தது. என்னவென்று அவளை எங்குக் கொணர்ந்து நிறுத்துவது? அழகு பயங்கரமாகாத இடம் எது? தவிரவும், மகேந்திரனுடன் இது விஷயமாகச் சச்சரவு நேரிடலாம்; அதனால் இது பின்னும் கோரமான உருவெடுத்துக் கொள்ளும். இதை விஹாரியினால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. அதனால்தான் அவன் கங்கைக் கரையின் தனிமையில் உலகின் நடுவே தனது மானசிக தெய்வத்தை நிறுத்தத் தன் இதயத்தையே 'நறும்புகையாக எரித்துக்கொண்டிருந்தான். தன் கனவு வலைகள் சிதையுமோ என்று அஞ்சியே அவன் கடிதம் எழுதி விநோதினியின் செய்தியை அறிய முற்படவில்லை.

தோட்டத்தின் தென்னண்டைப் பக்கம் கனிகள் குலுங்கி நிற்கும் கொய்யாச் செடியின் கீழே மேகம் சூழ்ந்த காலை நேரத்தில் விஹாரி நின்றிருந்தான். எதிரே சின்னஞ்சிறு படகுகள் போய் வந்துகொண்டிருந்தன. அவற்றையே ஏதோ நினைவுடன் பார்த்துக்கொண்டிருந்தான். பொழுது மெல்ல ஏறியது. வேலைக்காரன் உணவு தயாரிப்பதா, வேண்டாமா என்று கேட்டபோது விஹாரி, ''இப்போது கிடக்கட்டும்'' என்றான். மேஸ்திரி ஏதோ சில முக்கியமான யோசனைகள் கேட்க அவனை அணுகினான். விஹாரியோ, ''இன்னும் சற்றுப் பொறு'' என்றான்.

இந்த வேளையில் எதிரே அன்னபூரணி நிற்பது கண்டு விஹாரி திடுக்கிட்டான். பரபரவென்று எழுந்து தன் கரங்களால் அவளுடைய கால்களைப் பிடித்தவாறு தண்டனிட்டான். அன்னபூரணி வலது கரத்தினால் அன்புடன் அவனுடைய உடம்பைத் தடவினாள். துயரம் மண்டிய குரலில், ''விஹாரி, இப்படி இளைத்துப் போய்விட்டாயே!'' என்றாள் அன்னபூரணி.

''சித்தி, உன் அன்பைப் பெறத்தான் இப்படி இளைத்து விட்டேன்'' என்றான் விஹாரி.

இதைக் கேட்டதும் அன்னபூரணியின் விழிகள் நீரை உதிர்த்தன. விஹாரி பரபரப்படைந்தான். ''சித்தி! நீ இன்னும் சாப்பிடவில்லையே?'' என்றான்.

''இல்லை. இன்னும் பொழுது ஆகவில்லை.''

''வா, நான் சமைக்க ஏற்பாடு செய்கிறேன். இன்று பல காலம் பொறுத்து நீ உன் கையால் சமைத்து எனக்குப் பிரசாதம் கொடு. சாப்பிட்டுப் பிழைத்துப் போகிறேன்'' என்றான் விஹாரி.

மகேந்திரன் - ஆசா சம்பந்தமாக விஹாரி ஒரு பேச்சும் எடுக்கவில்லை. அன்னபூரணி தன் கைகளால் ஒரு நாள் விஹாரிக்கு அந்தப் பக்கம் செல்லவிடாமல் தடை எழுப்பி விட்டாள். ரோஷத்துடன் அவனும் அந்தத் தடையை நிறை வேற்றிவிட்டான்.

உணவானதும் அன்னபூரணி, ''விஹாரி, படகு துறையில் தயாராக இருக்கிறது; என்னுடன் கல்கத்தாவுக்கு வா'' என்ருள்.

''நான் அங்கு எதற்கு?''

''அக்காவுக்கு ரொம்ப உடம்பு; உன்னைப் பார்க்க ஆசைப் படுகிருள்.''

இதைக் கேட்ட விஹாரிக்கு வாரிப்போட்டது. ''மகேன் அண்ணு எங்கே?'' என்ருன்.

''அவன் கல்கத்தாவில் இல்லை. மேற்கே யாத்திரை போயிருக்கிருன்.''

இதைக் கேட்டதும் விஹாரியின் முகம் மாறியது. அவன் கம்மென்று அடங்கினுன்.

''உனக்கு இதெல்லாம் தெரியாதா?'' என்ருள் அன்னபூரணி.

''ஒரளவு தெரியும். ஆனுல் முடிவு வரையிலும் தெரியாது.''

அன்னபூரணி, மகேந்திரன் விநோதினியுடன் மேற்கே சென்ற விஷயம்பற்றித் தெரிவித்தாள். இதைக் கேட்டதும் விஹாரியின் கண்ணுக்கு எங்கும் மாறுதல்கள் தோன்றின. விண் மண் யாவும் பொலிவிழந்தன. கற்பனையில் நிரம்பிய அந்தத் தீஞ்சுவை யாவும் கைப்படைந்தன. 'மாயாவிநோதினி அன்று அந்திப்பொழுது என்னுடன் விளையாடிச் சென்ருளா? அவளுடைய காதல் மொழிகளும், ஆத்ம சமர்ப்பணமும் வெறும் வேஷந்தாஞ? சொந்த ஊரைவிட்டுக் கூச்சமின்றி மகேந்திரனுடன் ஒன்றியாக மேற்கே சென்றுவிட்டாளா அவள்? சீ! அவளும் ஒரு பெண்ணு? சீ! நானுந்தான் இருக்கிறேனே - ஒரு கணமேனும் அவளை நம்பிய மூடன்!' என்று அவன் தன்னையே நொந்துகொண்டான்.

மேகம் போர்த்த ஆடி மாத மாலைநேரம்; மழை ஓய்ந்த பின்னர் முழு நிலவு வீசும் இரவு; இவற்றின் மாயப் பொலிவு எங்கே?

48

துயரப்படும் ஆசாவின் கண்முன் எவ்வாறு நிற்பது என்று யோசித்தான் விஹாரி. வாயிலினுள் நுழைந்ததும், தலைவனற்ற வீட்டினுள் மண்டியிருந்த வேதனை அவனை ஒரு கணத்தில் கவிந்துகொண்டது. வீட்டு வேலைக்காரன், வாயில் காப்போன் இவர்கள் பக்கமும் மகேந்திரன் பொருட்டு உண்டான கூச்ச மிகுதியால் விஹாரி நிமிர முடியாமல் தலை குனிந்தான். முன்போல் த்ண்ணிய குரலில் பழகிய வேலையாட்களைக் குசலம் விசாரிக்கவும் அவனால் முடியவில்லை. பின்கட்டின் உள்ளே காலெடுத்து வைக்கவும் அவன் தயங்கினான். உலகின் கண் முன்னர் வெளிப்படையாக மகேந்திரன் ஆசாவை மிகவும் கடுமையான அவமதிப்புக்கு ஆளாக்கிவிட்டான். பெண்களின் கடைசி அணியையும் பிடுங்கிக்கொண்டு ஜனங்களின் கூரிய பார்வைக்கு முன்னர் நிறுத்துவது போன்ற அவமானத்துக்கு ஆளாகி ஒளிவின்றி வெட்ட வெளிச்சத்தில் வருந்திக் குறுகி நிற்கும் ஆசாவின் முகத்தை எவ்வாறுதான் அவனால் காண முடியும்?

ஆனால் இதைப்பற்றியெல்லாம் யோசிக்கவோ, எண்ணமிடவோ அவனுக்குப் பொழுதில்லை. பின்கட்டினுள் நுழைந்ததுமே ஆசா பரபரவென்று வந்தாள். "சீக்கிரமாக வந்து அம்மாவைக் கவனியுங்கள்; ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது" என்றாள்.

விஹாரியுடன் முதல் முறையாக வெளிப்படையாக ஆசா இப்போதுதான் பேசினாள். கஷ்டகாலத்தில் ஒரு சிறு அலையும் பல தடைகளை யெல்லாம் அடித்துக்கொண்டு போய்விடும். தொலைவில் வசிப்பவர்களையும் திடீரென்று வரும் பெருக்கைப் போல் ஒரு குறுகிய கரையில் ஒதுக்கிவிடும் வன்மை அதற்கு உண்டு.

கூச்சமின்றி வேதனையுடன் வந்த ஆசாவைக் கண்டு விஹாரி வருத்தம் அடைந்தான். மகேந்திரன் தன் குடும்பத்தை எத்தகைய நிலைக்குக் கொணர்ந்துவிட்டான் என்பது இச்சிறு நிகழ்ச்சியிலிருந்தே வெளிப்பட்டது. கஷ்டம் வந்தபோது வீடு பொலிவை இழப்பது போல் வீட்டு லட்சுமியின் நாணமென்ற அழகும் நிற்க இயலாது. அது மறைய வேண்டிவந்தது. மறைவு, ஒளிவு, இடைவெளி, தயக்கம் யாவும் விலகிச் சென்றன. அவற்றைக் கவனிக்கத்தான் பொழுது எங்கே!

விஹாரி ராஜலட்சுமியின் அறையினுள் நுழைந்தான். மூச்சு விட முடியாமல் திடீரென்று தவித்துக்கொண்டிருந்த

ராஜலட்சுமி ஓரளவு கஷ்டம் குறையவே நிம்மதியுடன் இருந்தாள். விஹாரி அவளை வணங்கிப் பாததூளியைத் தலைமேல் வைத்துக்கொண்டான். ராஜலட்சுமி அவனுக்குப் பக்கத்தில் உட்காரும்படி சாடை காட்டினாள். பின்னர் மெதுவாக, ''எப்படி இருக்கிறாயடா, விஹாரி! இத்தனை நாளாக ஆளையே காணோமே!'' என்றாள்.

''அம்மா! உனக்கு உடம்பு என்று எனக்கு ஏன் சொல்லி அனுப்பவில்லை? நான் இவ்வளவு நாள் வராமல் இருந்திருப்பேனா?''

''அது எனக்குத் தெரியாதாடா, அப்பா! உன்னைப் பெற்றெடுக்கவில்லை; ஆனால் உலகில் உன்னைவிட எனக்கு நெருங்கியவர் யார் இருக்கிறார்கள்?'' என்று சொல்லும்போது ராஜலட்சுமியின் கண்கள் நீரைப் பெருக்கின.

விஹாரி பரபரவென்று எழுந்து அலமாரியில் இருந்த மருந்துப்புட்டிகளைப் பார்க்கும் சாக்கில் தன்னை அடக்கிக் கொள்ள முயன்றான். பின்னர்த் திரும்பிவந்து அவன் ராஜலட்சுமியின் நாடியைப் பார்க்க முனைந்தபோது அவள், ''நாடியை விட்டுத் தள்ளு. நீ ஏன் இப்படி இளைத்துப்போய் விட்டாய்? சொல்லு'' என்று தன் மெலிந்த கரங்களால் விஹாரியின் கழுத்தைத் தடவிப் பார்த்தாள்.

''உன் கையால் மீன் கூட்டுச் சாப்பிடாமல் என் எலும்பு மறையவே மாட்டேனென்கிறது. நீ சீக்கிரம் குணமாகி எழுந்திரு. அதற்குள் சமையலுக்கு ஏற்பாடு செய்கிறேன்.''

ராஜலட்சுமி மங்கிய சிரிப்புடன், ''சீக்கிரமாகவே உன் ஏற்பாடுகளைச் செய்யடா, அப்பா. ஆனால் சமையலுக்கு அல்ல'' என்று விஹாரியின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். ''விஹாரி! நீ கல்யாணம் செய்துகொள்ளடா. உன்னைக் கவனித்துக்கொள்ள யாருமே இல்லை...அடி அன்னம், ஆசா! நீங்களாகத்தான் பார்த்து விஹாரிக்கு ஒரு கல்யாணம் செய்து வையுங்களடி. பாரேன்! என் செல்வத்தின் உடம்பு எப்படி ஆகி விட்டது!'' என்றாள்.

''நீ குணமாகி எழுந்திரு, அக்கா. இது உன் காரியம். நீதான் நடத்திவைக்க வேண்டும். நாங்கள் எல்லாரும் கூடிக் களிப்போம்'' என்றாள் அன்னபூரணி.

''எனக்கு எங்கே பொழுது இருக்கிறது? விஹாரியின் பொறுப்பு உங்கள் கையில்தான். அவனை எப்படியாவது சுகமாக இருக்கச் செய்வது உன் பொறுப்பு. அவன் கடனை என்னால் தீர்க்க முடியவில்லை. ஆனால் தெய்வம் அவனை நன்றாகவே வாழச் செய்யும்'' என்று விஹாரியின் தலையில் கை வைத்து ஆசி கூறினாள் ராஜலட்சுமி.

ஆசா அங்கு நிற்க முடியாமல் அழுவதற்காக வெளியே சென்றாள். அன்னபூரணி நீர் நிறைந்த கண்களுடனேயே விஹாரியின் முகத்தை அன்புடன் நோக்கினாள்.

ராஜலட்சுமிக்குத் திடீரென்று ஏதோ நினைவு வந்தது:

''அடியம்மா, ஆசா!''

ஆசா உள்ளே வந்ததும் அவள், ''விஹாரிக்குச் சாப்பிட ஏதாவது தயார் செய்தாயா?'' என்று கேட்டாள்.

''அம்மா! உன் இந்தச் சாப்பாட்டுப் பிள்ளையை வீட்டில் எல்லாருக்கும் தெரியும். உள்ளே வந்ததுமே பெரிய மீனுடன் வாமி உள்ளே ஓடி வருவதைப் பார்த்தேன். இன்னும் இந்த வீட்டில் என் புகழ் மறையவில்லை என்று தெரிந்துவிட்டது'' என்று விஹாரி, சிரித்துக்கொண்டே ஆசாவின் பக்கம் பார்த்தான்.

ஆசாவுக்குக் கூச்சம் உண்டாகவில்லை. அவள் அன்பு கலந்த புன்னகையுடன் விஹாரியின் கேலிப்பேச்சை ஏற்றுக் கொண்டாள். விஹாரி இந்தக் குடும்பத்தில் எத்தகையவன் என்பது அவளுக்கு முன்பு நன்றாகத் தெரியாது. பல சமயங்களில் வேண்டாத விருந்தாளி என்றே அவனை அவமதித்தும் இருக்கிறாள். எவ்வளவோ வேளைகளில் அவளுடைய வெறுப்பு, தன் செய்கைகள் மூலமாகவே வெளிப்பட்டிருப்பதும் அவளுக்குத் தெரியும். அதற்கெல்லாம் ஏற்பட்ட பச்சாத்தாபம் அவளை அவன்மேல் ஓர் அக்கறையும் அநுதாபமும் கொள்ளச் செய்தது.

''அன்னம்! சமையற்காரர் வேலையில்லை இது. நீயே நின்று கவனித்துக்கொள். இந்தப் பிள்ளை வங்காளி; நிறையக் காரம் இராவிட்டால் சாப்பிட மாட்டான்.''

''உங்கள் அம்மா விக்ரமபுரின் பெண். நீ நதியா ஜில்லாவைச் சேர்ந்த பிள்ளையை வங்காளி என்று சொல்கிறாயே! இது எனக்குப் பொறுக்காது'' என்றான் விஹாரி.

இதுபற்றிக் கேலிப் பேச்சுத் தொடங்கியது. பல நாட்களுக்குப் பின்னர் மகேந்திரனுடைய வீட்டில் வேதனைப்பாரம் சற்றுக் குறைந்தது.

ஆனால் இவ்வளவு பேச்சுகளுக்கிடையேயும் மகேந்திரனைப் பற்றி எவரும் பேச்செடுக்கவே இல்லை. முன்பெல்லாம் விஹாரியிடம் ராஜலட்சுமி மகேந்திரனைப்பற்றியே பேசுவது வழக்கம். மகேந்திரனும் அது விஷயமாக ராஜலட்சுமியை எவ்வளவோ பரிகாசம் செய்ததுண்டு. அந்த ராஜலட்சுமி ஒருதரம் கூட மகேந்திரனுடைய பெயரை எடுக்காதது கண்டு விஹாரி உள்ளூறத் திகைப்புற்றான்.

ராஜலட்சுமி சற்று உறங்கவும், விஹாரி வெளியே வந்து

அன்னபூரணியிடம், "அம்மாவுக்கு உடம்பு மோசமாயிருக்கிறது" என்றான்.

"அதுதான் தெளிவாகத் தெரிகிறதே!" என்றவாறு அன்னபூரணி தன் அறைச் சாளரத்தின் அருகே உட்கார்ந்தாள். வெகு நேரம் கம்மென்றிருந்த பின்னர் அவள், "ஒரு தடவை மகேனை அழைத்து வருகிறாயா, விஹாரி! இனியும் தாமதிப்பது சரியல்ல" என்றாள்.

விஹாரி சற்று நேரம் பதில் பேசவில்லை. பிறகு, "நீ சொன்னால் நான் அதை நிச்சயம் செய்வேன். அவன் விலாசம் யாருக்காவது தெரியுமா?" என்றான்.

"சரியாகத் தெரியாது; தேடிப் பிடிக்கவேண்டும். விஹாரி, இன்னும் ஒன்று உனக்குச் சொல்கிறேன்: ஆசாவின் முகத்தைப் பார். விநோதினியின் வலையிலிருந்து மகேனை விடுவிக்காவிட்டால் அவள் பிழைக்க மாட்டாள். உள்ளத்தினுள் மரணத்தின் அம்பு பாய்ந்திருப்பதை அவள் முகத்தைக் கண்டே நீ தெரிந்துகொள்ளலாம்."

விஹாரி தனக்குள் இப்படிக் கூறிச் சிரித்துக்கொண்டான்: "பிறரை விடுவிக்க நான் போகவேண்டும்; தெய்வமே! என்னைக் காப்பவர் யார்?" பின், "விநோதினியின் பிடியிலிருந்து மகேனை என்றென்றும் விடுவித்துவிட எனக்கு என்ன மந்திரம் தெரியுமா, சித்தி? தாய்க்கு உடம்பு என்று இரண்டொரு நாட்கள் அவன் வரலாம். ஆனால் மறுபடி திரும்பமாட்டான் என்று எப்படித் திடமாகச் சொல்வது?" என்றான்.

இதே சமயம் அழுக்கடைந்த உடையுடன் முகக்கிட்டவாறு ஆசா மெல்ல உள்ளே வந்து பெரியம்மாவின் காலருகே உட்கார்ந்துகொண்டாள்: ராஜலட்சுமியின் உடம்பைப்பற்றி அவர்கள் பேசுகிறார்கள் என்று தெரிந்ததும் அவள் ஆவலோடு அதைக் கேட்க வந்தாள். பதிவிரதையான ஆசாவின் முகத்தில் பரவிய வேதனைக் குறியைக் கண்டதும் விஹாரியின் உள்ளத்தினுள் ஒரு பக்தி பிறந்தது: வேதனையின் கொதிநீரில் குளித்த இந்தப் பெண் பழங்காலத்துப் பத்தினிமகளைப்போல் ஒரு நிலைத்த மரியாதையைப் பெற்றுவிட்டாள். இவள் சாதாரணப் பெண் அல்ல. விடியாத கவலைக்குள்ளான இவள், புராணங்களில் வரும் பதிவிரதைகளுக்குச் சமமாகிவிட்டாள்.

விஹாரி ஆசாவிடம் ராஜலட்சுமிக்கு பத்தியம், மருந்து இவைகளைப்பற்றி எடுத்துச் சொல்லிவிட்டு அவளை அனுப்பினான். பின்னர் ஒரு நீண்ட பெருமூச்சுடன், "நான் மகேந்திரனைக் காப்பாற்றுகிறேன்" என்று அன்னபூரணியிடம் சொன்னான்.

மகேந்திரனுடைய பாங்கியில் சென்று விசாரித்த போது அலாகாபாத் கிளையில் அவன் கொடுக்கல் வாங்கல்

தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் செய்தி விஹாரிக்குக் கிட்டியது.

49

ஸ்டேஷனை அடைந்ததும் விநோதினி நேராக இண்டர் வகுப்புப் பெட்டியில் பெண்கள் வண்டியில் ஏறிக்கொண்டாள். ''அதென்ன! உனக்காக நான் இரண்டாவது வகுப்பு டிக்கட் வாங்கியிருக்கிறேனே!'' என்றான் மகேந்திரன்.

''அவசியமில்லை. இதுவே எனக்குச் சௌகரியமாக இருக்கும்'' என்றாள் விநோதினி.

மகேந்திரனுக்கு வியப்பாக இருந்தது. விநோதினி இயல்பாகவே சற்றுச் சுகமாக இருக்க விரும்புபவள். முன்பு ஏழைமையின் சின்னங்கள் எதுவும் அவளுக்குப் பிடிக்காமல் இருந்தன. தன் குடும்பத்தின் வறுமையை ஓர் அவமானமாகவே கருதியவள் அவள். மகேந்திரனுடைய வீட்டில் தங்கு தடையின்றிப் பெருகும் தாராளம், உல்லாசமாக இருக்கத் தேவையான உபகரணங்கள், மற்றச் சாதாரண மக்களைவிடப் பணக்காரர் என்ற பெருமை இவை ஒரு காலத்தில் விநோதினியின் மனத்தை வசப்படுத்தின என்று அவன் கருதினான். கஷ்டப்படாமலேயே அவள் இந்தச் செல்வக்குவியலுக்கும், இந்தச் சுகம், பெருமைகளுக்கும், எஜமானியாகி யிருக்கமுடியும் என்ற கற்பனை அவளுடைய மனத்தைத் தூண்டிவிட்டது. இப்போது அவள் மகேந்திரனுக்கே எஜமானியாகும் வேளை வந்துவிட்டது: வேண்டாமலேயே அவனுடைய செல்வம் அவளுடைய கைக்கு வரக் காத்துக் கிடந்தது. இந்த வேளையில் அலட்சியமாகவும் பிடிவாதத்துடனும் அவள் கஷ்டமும் கூச்சமும் நிறைந்த வறுமையை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? எதற்கும் மகேந்திரனைச் சார்ந்து நிற்பதைக் குறைத்துக்கொள்ள அவள் எண்ணினாள். வெறிபிடித்த மகேந்திரன் விநோதினியை அவளுடைய சொந்த இடத்தை விட்டு வாழ்நாள் முழுவதும் பிரித்து அழைத்து வந்துவிட்டான். அவனுடைய கையிலிருந்து தன் அழிவுக்கு மூலகாரணமாகத் தோன்றும் எதையும் பெற அவள் விரும்பவில்லை. மகேந்திரனுடைய வீட்டில் இருந்த வரையில் அவள் விதவையைப் போல் அவ்வளவு கடுமையான விரதத்தைக் கடைப்பிடிக்கவில்லை. ஆனால் இப்போது அவள் எல்லா விதமான சுகவாழ்விலிருந்தும் விலகியே நடந்தாள்.

ஒரே தடவை உண்டாள்; சற்றுப் பருமனான துணிகளை அணிந்தாள். ஓயாமல் ஊற்றுப்போல் பெருகும் சிரிப்பும் கேலிப் பேச்சுக்களும் எங்கே போயினவோ! அவள் வரவர அடங்கியும், விலகியும், மறைந்தும் இருப்பது கண்டு மகேந்திரன் பயந்து, சாதாரணமான பேச்சைக்கூட அழுத்திச் சொல்லத் துணியவில்லை. அவனுக்கு வியப்பும் கோபமும் மேலிடவே, பொறுமை தளர்ந்தது. 'எட்டாத கொம்பில் இருந்த பழம் போன்ற என்னைக் கஷ்டப்பட்டுப் பறித்த விநோதினி மோந்து கூடப் பாராமல் தரையில் எறிவானேன்?' என்று அவன் எண்ணினான்.

''எந்த ஊருக்கு டிக்கட் வாங்கச் சொல்லுகிறாய்?''

''மேற்கே உங்களுக்கு இஷ்டமான இடத்துக்குப் போகலாமே! நாளைக் காலை வண்டி எங்கு நிற்குமோ அங்கே இறங்கி விடலாம்.''

இப்படி யாத்திரை செல்வதில் அவனுக்கு இஷ்டமே இல்லை. சுகத்துக்குத் தடை நேரிட்டால் அவனுக்குக் கஷ்டமாக இருக்கும். பட்டணத்துக்குச் சென்று நல்ல இடமாகத் தங்காவிட்டால் அவன்பாடு திண்டாட்டந்தான். தேடிப் பிடித்த இடம் தனக்குத் தகுதியுள்ளதாகச் செய்துகொள்ளக் கூடிய ஆளல்ல மகேந்திரன். அதனால் அவன் ரோஷத்துடனும் வெறுப்புடனும் வண்டியில் ஏறிக்கொள்ள வேண்டியதாயிற்று. இன்னொரு பக்கம் அவனுடைய மனத்தில் பயமும் இருந்தது. எங்கேயாவது வழியில் சொல்லாமல் கொள்ளாமல் விநோதினி இறங்கிச் சென்று விடலாமல்லவா!

விநோதினி இவ்வாறு சனிக்கிரகம் போல் தானும் சுழன்று மகேந்திரனையும் ஆட்டுவித்தாள். எங்கும் அவனுக்கு ஓய் வளிக்கவில்லை. வெகு சுலபமாக மக்களைச் சொந்தமாக்கிக் கொள்ளும் திறமை விநோதினிக்கு உண்டு. சீக்கிரமாகவே வண்டியிலிருந்த மற்றப் பிரயாணிகளுடன் நட்புப் பிடித்துக் கொள்ளுவாள் அவள். தனக்குப் பிடித்த இடத்தைப்பற்றிய விஷயங்களையெல்லாம் கிரகித்துக்கொள்ளுவாள். சத்திரத்தில் தங்கி, அங்கே பார்க்க வேண்டியவைகளையெல்லாம் நண்பர்களின் துணையுடன் பார்த்துவிடுவாள். விநோதினிக்கு ஒரு விதத்திலும் உதவ முடியாமற் போகவே மகேந்திரனுக்கு மானம் போகும் நிலைமை ஏற்பட்டது. டிக்கட்டு வாங்கித் தருவது தவிர அவனுக்கு வேறு வேலையில்லை. மற்ற வேளைகளில் அவனுடைய சுபாவமே அவனையும், அவனுடைய செய்கைகளையும் பிய்த்தெடுத்தது. முதலில் சில நாட்கள் அவன் விநோதினியுடன் தெருவில் சுற்றினான். ஆனால் நாளடைவில் அது அவனுக்குக் கசந்தது. அவன் சாப்பிட்டுவிட்டுத் தூங்க முயலு

வான். விநோதினி நர்ளெல்லாம் சுற்றித் திரிவாள். தாயின் அன்பில் வளர்ந்த மகேந்திரன் இப்படித் தெருவில் கிளம்புவான் என்று எவருமே கற்பனைகூடச் செய்திருக்க மாட்டார்கள்.

ஒரு நாள் இருவரும் அலாகாபாத் ரெயில் நிலையத்தில் வண்டிக்காகக் காத்து நின்றார்கள். ஏதோ எதிர்பாராத காரணத்தினால் வண்டி வரச் சற்றுத் தாமதமாகியது. இதன் நடுவே வந்துபோகும் வண்டிகளில் இருந்த பிரயாணிகளை விநோதினி கூர்ந்து • • கவனித்தாள். மேற்கே யாத்திரை செல்லும் வழியே திடீரென்று யாரையாவது பார்க்கக்கூடும் என்று அவளுக்கு ஆவல் போலும்! அடைபட்ட சந்து வீட்டில் தனிமையாக ஒரு வித முயற்சியும் இன்றிச் சாவதைவிடத் தினந்தோறும் புது முயற்சியுடன் திறந்த வெளியில் கும்பல் நடுவே அலைவதில் சற்று அமைதியாவது இருக்கிறதல்லவா!

திடீரென்று ஒரு சமயம் ஸ்டேஷனில் ஒரு கண்ணாடிப் பெட்டியின்மேல் விநோதினியின் பார்வை செல்லவும், அவள் திடுக்கிட்டாள். அந்தத் தபாலாபீஸ் பெட்டியினுள், விவரம் தெரியாத ஜனங்களுக்கு வந்த கடிதங்கள் வைத்திருக்கும். அந்தப் பெட்டியிலிருந்த கடிதம் ஒன்றில் விஹாரியின் பெயர் அவளுடைய கண்களில் பட்டது. 'விஹாரிலால்' என்ற பெயர் அப்படி விசேஷமானதல்ல. அந்தக் கடிதத்தில் கண்ட விஹாரி விநோதினிக்கு வேண்டிய ஆள்தான் என்று முடிவு கட்டவும் முடியாது. ஆனால் அவள் மனமோ விஹாரியின் முழுப் பெயரைக் கண்டதுமே சற்றும் ஐயமின்றி அவன் தான் இதற்கு உரிமையாளன் என்று தீர்மானித்தது. அதில் கண்ட விலாசத்தை அவள் மனப்பாடம் செய்துகொண்டாள். மிகவும் வெறுப்புடன் மகேந்திரன் ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்திருந்தான். விநோதினி அவனிடம் வந்து, "அலாகாபாதில் கொஞ்ச நாட்கள் தங்கவேண்டும்" என்றாள்.

விநோதினி தன் இஷ்டம்போல் மகேந்திரனை ஆட்டி வைத்தாள். ஆனால் அவனுடைய பசித்த உள்ளத்துக்கு வேண்டிய உணவைத் தரவில்லை. இதனால் அவனுடைய ஆண்மைக்கு இழுக்கே ஏற்பட்டது. அவனுடைய மனம் எதிராகக் கிளம்பவும் செய்தது. அலாகாபாதில் சில நாட்கள் தங்கி இளைப்பாறினால் மேல் என்றுதான் அவனுக்கும் இருந்தது. ஆனால் தன் மனப்போக்கின்படியே இருந்தாலும் விநோதினியின் இஷ்டம்போல் சம்மதித்து விடாமல் அவன் மனம் கோணிக்கொண்டது. அவன் கோபத்துடன், "வெளியே கிளம்பியவன், 'போய்த்தான் தீருவேன்! திரும்பமாட்டேன்" என்றான்.

''நான் வரமுடியாது.''

''சரி, நீ தனியாக இரு. நான் போகிறேன்.''

''நல்லது'' என்று விநோதினி மறு பேச்சின்றிக் கூலி யாளைக் கூப்பிட்டுக்கொண்டு ஸ்டேஷனைவிட்டு வெளியேறினாள்.

ஆண்மைப் பிகுவுடன் மகேந்திரன் முகம் கறுத்துப் பெஞ்சி யில் உட்கார்ந்திருந்தான். விநோதினியைப் பார்க்க முடிந்த வரையிலும் அவன் அசையாமல் இருந்தான். அவள் ஒரு தடவைகூடத் திரும்பிப் பாராமல் வெளியே போய்விடவே, பரபரவென்று கூலியாளைக் கூப்பிட்டுப் பெட்டி படுக்கை களுடன் அவளைப் பின்பற்றிச் சென்றான். வெளியே வந்த போது விநோதினி ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்திருந்தாள். மகேந்திரன் வாய் திறவாமல் மூட்டைகளை வண்டியில் ஏற்றி விட்டு, வண்டிக்காரன் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். தன்னுடைய ஆண்பிள்ளைத்தனத்திற்கு இழுக்கு வரவே விநோதினியின் எதிரே வண்டியினுள் முகம் காட்ட அவனால் முடியவில்லை.

ஆனால் வண்டி போய்க்கொண்டிருந்தது. ஒரு மணி நேரமாகியது. பட்டணத்துப் பக்கத்தை விட்டு வயல்காடுகள் தொடங்கின. வண்டிக்காரனைக் கேட்க மகேந்திரனுக்குக் கூச்சமாக இருந்தது. ஏனென்றால், வண்டியினுள் இருக்கும் பெண்பிள்ளைதான் எஜமானி என்று வண்டிக்காரன் நினைத்துக் கொள்வானே! அதுவும் இந்த ஆண்பிள்ளையை அவள் அவசிய மாக எண்ணி ஆலோசனைகூடச் செய்யவில்லை என்றும் அவனுக்குத் தோன்றுமே! மகேந்திரன், கோபம் உள்ளுக்குள் ளேயே பொங்கிச் சுழலக் கம்மென்று உட்கார்ந்திருந்தான்.

வண்டி யமுனையின் கரையில் ஒரு பாதுகாப்பான தோட்டத்தினுள் வந்து நின்றது. மகேந்திரன் வியப்படைந் தான். இது எவருடைய தோட்டம்? இதன் விலாசந்தான் விநோதினிக்கு எவ்வாறு கிடைத்தது?

வீடு மூடிக் கிடந்தது. கூப்பிட்டபோது கிழட்டு வாயிற் காப்போன் வெளியே வந்தான். ''வீட்டுக்காரர் பணக்காரர். அருகில்தான் இருக்கிறார். அவருடைய அநுமதி கிடைத்தால் வீட்டில் தங்கலாம்'' என்றான் அவன்.

விநோதினி மகேந்திரனுடைய முகத்தை நோக்கினாள். இந்த அழகிய வீட்டைக் கண்டதுமே மகேந்திரனுக்கும் பிடித் திருந்தது. நீண்ட காலத்துக்குப் பின் சில நாட்கள் தங்கும் எண்ணம் அவனுக்கு மலர்ச்சியைத் தந்தது. ''சரி வா, அந்த மனிதர் வீட்டுக்குப் போவோம். நீ வெளியே வண்டியில் காத்திரு. நான் உள்ளே போய் வாடகையைப் பேசிக்கொண்டு வருகிறேன்'' என்றான் அவன்.

''இனி என்னால் சுற்ற முடியாது. நீங்கள் போகலாம். நான் இங்கேயே சற்று ஓய்வு எடுத்துக்கொள்கிறேன். பயப் படத் தேவையில்லை'' என்றாள் விநோதினி.

மகேந்திரன் வண்டியில் ஏறிச் சென்றான். விநோதினி அந்தக் கிழவனை அழைத்து அவனுடைய குழந்தைகள் குட்டி களைப்பற்றி விசாரித்தாள்: 'அவன் யார்? என்ன வேலை? அவனுடைய பெண்களுக்கு எங்கு விவாகமாகியது?' என்று கேட் டறிந்தாள். அவனுடைய மனைவி காலமானதுபற்றிக் கேட்ட தும் அநுதாபம் தொனிக்கும் குரலில், ''அடடா! ரொம்பக் கஷ்டந்தான் உங்களுக்கு! இந்தத் தள்ளாத வயதில் தனியாக உலகத்தில் கிடக்கவேண்டியிருக்கிறதே! பார்க்கக் கொள்ளக் கூட எவரும் இல்லையே!'' என்றாள். பின்னர்ப் பேச்சோடு பேச் சாக, ''விஹாரிபாபு இங்கே இல்லையா?'' என்றாள்.

''ஆம், கொஞ்ச நாள் இருந்தார். உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

''அவர் எனக்கு உறவு.''

கிழவன் சொன்ன அடையாளங்களைக் கேட்டதும் விநோதினிக்குச் சற்றும் சந்தேகம் இராமல் போய்விட்டது. கிழவனைக் கொண்டு கதவைத் திறக்கச் செய்து விஹாரி எந்த அறையில் தூங்குவான், எங்கு உட்காருவான் எல்லாவற்றை யும் தெரிந்துகொண்டாள். அவன் போனதுமுதல் அறைகள் பூட்டிக் கிடந்தன. அதனால் அறைகளில் கண்ணுக்குத் தெரியாமல் அவனுடைய நடமாட்டம் இருப்பதாகவே அவளுக்குப் பட்டது: காற்றோடு அவை கலந்து விடவில்லை. விநோதினி இதயம் நிரம்ப அந்தக் காற்றை உட்கொண்டாள். அந்தக் காற்று அவளுடைய உடலெங்கும் தடவியது. ஆனால் விஹாரி எங்கே சென்றான் என்ற விஷயம்மட்டும் அவளுக்குக் கிடைக்கவில்லை. அவன் திரும்பி வந்தாலும் வரலாம். தெளிவாக எதுவும் தெரியாது. கிழவன் தன் எஜமானனைக் கேட்டுவந்து சொல்வதாக விநோதினிக்கு ஆறுதல் கூறினான்.

வாடகை முன்பணமாகக் கொடுத்துவிட்டு மகேந்திரன் அநுமதியுடன் வந்து சேர்ந்தான்.

50

ஹிமாலய மலையின் சிகரங்களில் பனிக் கட்டி உருகி யமுனைக்கு வற்றாத பெருக்கை அளிக்கின்றது. பல காலங்களாகப் பல கவிஞர்கள் கூடி அந்த யமுனையைப்பற்றிப் புனைந்த கவிதைப் பெருக்குகளும் எண்ணில் அடங்காதவை. இந்தக் கவிதைப் பெருக்கில் பல வேறு சந்தங்கள் தொனித்தன. இவற்றின் அலை புரளும் இசை, உள்ளத்தைச் சிலிர்க்க வைத்து உணர்ச்சிப் பெருக்கால் நிரப்பவும் சக்தி வாய்ந்தது.

சாயங்காலம் மகேந்திரன் யமுனைக் கரையில் வந்து உட்கார்ந்தபோது, காதலின் தீவிரம் அவனுடைய பார்வையிலும் பெருமூச்சிலும் ஒவ்வோர் இரத்தக் குழாயிலும், எலும்புகளிலுங்கூட வெறியோட்டத்தை எழுப்பியது. வானில் அந்திமங்கலின் சூரிய கிரணங்கள் பொன் வீணையில் எவரும் கேட்டிராத சோக கீதத்தை இசைப்பதுபோல் இருந்தது.

ஜனநடமாட்டமே இராத அந்த மணற் பரப்பில் பல்வேறு நிறங்களுடன் பகல் மெல்லக் கழிந்தது. மகேந்திரன் விழிகளைப் பாதி மூடியவாறு காவிய லோகத்தில் மாட்டுக் குளம்பிலிருந்து எழும் தூசிகளின் நடுவே பிருந்தாவனத்தின் ஆநிரைகள் தொழுவத்திற்குத் திரும்பும் 'அம்பா' என்ற ஒலியைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

கார்முகில்கள் வானெங்கும் நிறைந்தன. அறிமுகம் இராத இடத்தில் இருளானது கடுமையான திரை மட்டுமல்ல; அதில் விசித்திரமான இரகசியங்களும் நிறைந்திருக்கும். அதனுள் இருக்கும் ஓரளவு ஒளியோ அல்லது காணும் உருவோ உச்சரிக்க முடியாத மொழியில் பேசும். எதிர்க் கரையில் தெளிவற்ற வெண்ணிறமான மணற் பரப்பு, அலையற்ற நீரின் மைக் கருமை, தோட்டத்தில் அடர்ந்து பரந்த வேப்ப மரத்தின் நிச்சப்தம், மரங்களே இராத மங்கலான நதியின் வளைந்த கீற்று, அந்த ஆடி மாதத்து அந்திப்பொழுது யாவும் குறிப்பிட இயலாத தெளிவற்ற உருவெடுத்து மகேந்திரனைச் சூழ்ந்துகொண்டன.

பதாவளியில் வரும் கார்காலத்துக் களவுச் சேர்க்கை மகேந்திரனுக்கு நினைவு வந்தது. காதலி வெளியே கிளம்பி யமுனையின் கரையில் தனியே வந்து நிற்கிறாள். கடந்து செல்வது எவ்வாறு? "'ஐயா! என்னை அக்கரைக்கு இட்டுச் செல்லுங்கள்! இட்டுச் செல்லுங்கள்' என்கிறாள். மகேந்திரனின் இதயத்தினுள் அந்தக் குரல் எதிரொலிக்கிறது: 'ஐயா! அக்கரைக்கு இட்டுச் செல்லுங்கள்.'

ஆற்றுக்கு அப்பால் இருளில் வெகு தொலைவில் நின்றிருந்-

தாள் அவள். அப்படியிருந்தும் மகேந்திரன் அவளைத் தெளிவாகக் கண்டான். அவளுக்குக் காலம், வயது எதுவும் இல்லை. அவள் சாசுவதமான ஆயர் மகள். அவளை அவன் அடையாளம் கண்டுகொண்டான். அவள் விநோதினியேதான். பிரிவு, வேதனை, இளமை இவற்றுடன் அந்தக் காலம் தொடங்கி அவள் யாத்திரை கிளம்பிப் பல்வேறு இசைகளிலும் சந்தங்களிலும் புகுந்து இந்தக் காலத்தின் கரையை அடைந்திருக்கிறாள்! இன்று நடமாட்டமற்ற யமுனைக் கரையின்மேல் வானில் அவளுடைய குரல்தான் கேட்கிறது: 'ஐயா! என்னை அக்கரைக்கு இட்டுச் செல்லுங்கள்.' பரிசலுக்காக அவள் இந்த இருளில் இன்னும் எத்தனை காலந்தான் காத்து நிற்பாளோ, 'ஐயா! என்னை அக்கரைக்கு இட்டுச் செல்லுங்கள்' என்று கூவிக் கொண்டு?

மேகத்தின் ஒரு பகுதி விலகிப் பிறைமதி தோன்றியது. நிலவின் மாய மந்திரத்தில் கட்டுண்டு ஆறு, ஆற்றங்கரை வானம் தொடுவானம் யாவும் இந்த உலகைவிட்டே அப்பால் சென்றுவிட்டன. மண்ணுலகின் தொடர்பே அங்கு இல்லை. காலப்பெருக்கே இற்றுவிட்டது. கடந்த காலத்தின் வரலாறும் மறைந்தது. எதிர் காலத்தின் நிகழ்ச்சிகளும் மறைந்து விட்டன. வெள்ளி நிலவு பரந்த யமுனைக் கரையில் மகேந்திரன், விநோதினி இவர்களுடன் நிகழ்காலம் உலகின் சட்ட திட்டங்களுக்கு அப்பால் நிலைத்து நின்றது.

மகேந்திரனுக்கு வெறி பிடித்துவிட்டது. விநோதினி தன்னை வெறுப்பாள், நிலவு வீசும் இரவில் வானுலகைப் போன்ற தனிமையைத் திருமகள்போல் நிரப்பமாட்டாள் என்று அவன் கற்பனைகூடச் செய்யவில்லை. அந்தக் கணமே எழுந்து விநோதினியைத் தேடி வீட்டினுள் சென்றான்.

படுக்கையறைக்குச் சென்றபோது அறையில் மலர்களின் மணம் கமழ்ந்தது. திறந்த சாளரக் கதவுகள் மூலம் நிலவொளி வெளேரென்ற படுக்கையின்மேல் வந்து படிந்தது. விநோதினி தோட்டத்து மலர்களைப் பறித்துத் தன் குழற் கற்றையிலும் கழுத்திலும் இடையிலும் மாலையாக அணிந்திருந்தாள். மலர்களால் அணிகலன் பூண்ட அவள், பூக்கள் மலிந்து விளங்கும் கொடிபோல் படுக்கையில் படுத்திருந்தாள்.

மகேந்திரனுடைய வெறி இரு மடங்காகியது. அவன் குரல் அடைக்க, "விநோத்! நான் யமுனைக் கரையில் காத்திருந்தேன். நீ இங்கு எதிர்பார்த்திருக்கிறாய் என்று வானின் மதி எனக்கு எடுத்துச் சொல்லியது. அதனால் நானே வந்துவிட்டேன்" என்றவாறு அவன் படுக்கையில் உட்காரச் சென்றான்.

விநோதினி திடுக்கிட்டுப் பரபரவென்று எழுந்து வலது

கையால் தடுத்தாள்: "போய்விடுங்கள், இந்தப் படுக்கையில் உட்காராதீர்கள்!"

படகு சட்டென்று மணல் மேட்டில் தட்டுப்பட்டது போல் மகேந்திரன் திகைத்து நின்றான். வெகு நேரம்வரை அவனால் பேசக்கூட முடியவில்லை. அவன் தான் சொன்னதைக் கேட்காதிருப்பானோ என்று அஞ்சி விநோதினி படுக்கையை விட்டு இறங்கி வந்தாள்.

"நீ யாருக்காக அலங்காரம் செய்துகொண்டாய்? யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாய்?" என்று கேட்டான் மகேந்திரன்.

விநோதினி தன் மார்பை அழுத்திக்கொண்டாள். "நான் யாருக்காக எதிர்பார்த்திருக்கிறேனோ, அவர் என் இதயத்தினுள் இருக்கிறார்" என்றாள்.

"அவன் யார்? விஹாரியா?"

"அவர்பேரை வாயில் எடுத்துச் சொல்லக்கூட வேண்டாம் நீங்கள்."

"அவனுக்காகத்தான் இப்படி மேற்கே அலைகிறாயா?"

"அவருக்காகத்தான்."

"இங்கு நீ காத்திருப்பதுங்கூட அவன்பொருட்டுத் தானே!"

"அவர் பொருட்டுத்தான்."

"அவன் விலாசம் கிடைத்ததா?"

"தெரியாது. ஆனால் எப்படியாவது நிச்சயம் கண்டு பிடித்துவிடுவேன்."

"அதற்கு நான் இடம் தரமாட்டேன்."

"அப்படியே இடந் தர வேண்டாம். என் உள்ளத்தில் இருப்பவரை உங்களால் வெளிக் கிளப்ப முடியாதே!" என்றதும் விநோதினி கண்களை மூடிக்கொண்டு இதயத்தினுள்ளே விஹாரியை ஒரு முறை எண்ணிப் பார்த்தாள்.

மலரணி புனைந்து விரகவேதனையில் வாடிநிற்கும் விநோதினியின்மேல் மோகவெறியும், அவளால் அதற்கு நேரிட்ட தடையுமாகச் சேர்ந்து மகேந்திரனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பி விட்டன. அவன் முஷ்டியைக் குவித்து, "கத்தியால் கிளறி உன் இதயத்தை விட்டு அவனை அகற்றுவேன்" என்றான்.

விநோதினி சற்றும் முகமாறுதலின்றி, "உன் காதலைவிட உன் கத்தி என் இதயத்தினுள் சுலபமாக நுழையும்" என்றாள்.

"உனக்குச் சற்றும் பயமில்லையா? இங்கு உன்னை யார் காப்பாற்றுவார்கள்?"

"நீதான் என்னைக் காப்பாற்றுவதற்கு இருக்கிறாயே! நீயே உன் வெறியிலிருந்து என்னைக் காப்பாற்றுவாய்."

''இந்த அளவாவது நம்பிக்கையும் அக்கறையும் என் மேல் இருக்கிறதே!''

''அது இராவிட்டால் தற்கொலை செய்துகொண்டிருப்பேன்: உம்முடன் வெளியில் வந்திருக்கவே மாட்டேன்.''

''சாவதுதானே! இந்த நம்பிக்கையை என் கழுத்தில் சுருக்குப் போட்டு என்னை ஊர் ஊராக இழுத்துச் சாக அடிப்பானேன்? நீ செத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், எண்ணிப் பார்.''

''அது எனக்குத், தெரியும். ஆனால் விஹாரியின் நம்பிக்கை இருக்கிறவரையில் நான் சாகமுடியாது.''

''நீ சாகிற மட்டிலும் என் ஆசையும் அடங்காது. எனக்கும் விடுதலை இல்லை. இன்றுமுதல் மனப்பூர்வமாக நான் கடவுளிடம் உன் மரணத்தையே கோரி வேண்டுவேன். நீ எனக்கும் வேண்டாம்; விஹாரிக்கும் உரியவளாகக் கூடாது. நீ போ! எனக்கு விடுதலை கொடு. என் தாய் அழுகிறாள். என் மனைவி அழுகிறாள். அவர்களுடைய கண்ணீர் என்னைத் தொலைவிலிருந்து சுட்டுப் பொசுக்குகிறது. நீ செத்துப் போய் உலகில் எவருக்கும் எட்டாதவளாகப் போனால் ஒழிய, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க எனக்கு ஒழிவிராது'' என்று மகேந்திரன் வெளியே ஓடினான். விநோதினி தனிமையில் தன்னைச் சுற்றி எழுப்பிய கனவு வலை அறுந்துபோயிற்று.

அவள் கம்மென்று வெளியே பார்த்தவண்ணம் நின்றாள். வானில் ஒளிர்ந்த நிலவில் இருந்த அமுதம், அப்பால் மணல் வெளி, அதையொட்டிக் கருமையான ஆற்றுவெள்ளம், பின்னர் அக்கரையின் தெளிவற்ற காட்சிகள் எல்லாம் பெரிய வெள்ளைக் காகிதத்தில் பென்ஸிலினால் வரைந்த சித்திரம்போல் சுவையிழந்து தோற்றின.

மகேந்திரனை விநோதினி பலமாக இழுத்தாள்; அதே போல் புயல் வேகத்தில் வேருடன் அவனைக் களைந்து எறியவும் செய்தாள்! இன்று அதை எண்ணி அவள் உள்ளம் பின்னும் அலைச்சலுக்கு உள்ளாகியது. அவளிடம் இந்தத் திறமை இருக்கிறது. பின்னர் விஹாரிமட்டும் ஏன் இந்த நிலவில் பொங்கியெழும் கடலைப்போல் அவள் எதிரே வந்து பணியவில்லை? காரணமின்றி எழுந்த காதலின் வேகம் தினமும் அவளுடைய நினைவில் வந்து தோன்றக் காரணம் என்ன? பின்னர் இன்னொரு வேதனை வெளியிலிருந்து அதை உலுக்கி நிறைவு பெறாமல் தடை செய்கிறது. ஏன்? இப்போது எழுந்த இந்தப் பெரிய புரட்சியுடன் வாழ்நாளெல்லாம் அவள் போராடுவதா? இந்தப் புரட்சியைத்தான் அவள் எவ்வாறு அடக்குவது?

அன்று அவள் அணிந்த மலர் மாலைகளின்மேல் மகேந்திர னது பார்வை பட்டது. அதனால் அவள் அவற்றைப் பிய்த் தெறிந்தாள்; அவளுடைய திறமை வீண்; முயற்சியும் வீண்; வாழ்க்கையே வீணாகிவிட்டது! இந்தக் காடு, நிலவு, யமுனைக் கரை, அபூர்வமான பொலிவுடன் திகழும் உலகம் யாவும் வீணே!

இவ்வளவும் அநாவசியமே! இருந்தாலும், அவை இருந்த இடத்திலேயே நிற்கின்றன. உலகத்தில் எதற்கும் ஓரளவு மாறுதல் ஏற்படவில்லை. நாளைய தினம் சூரியன் தோன்றத் தான் செய்வான். உலகம் தன் சின்னஞ் சிறு காரியத்தையுங் கூட மறக்காது. சற்றும் அசைவின்றி விஹாரி தொலைவிலேயே பிராம்மணச் சிறுவனுக்குக் கல்வி புகட்டிக்கொண்டு இருப்பான்.

விநோதினியின் கண்களிலிருந்து நீர் வெடித்துக்கொண்டு வந்தது. தன் பலம், ஆவல் இவைகளைக் கொண்டு ஏதோ கல்லைப் புரட்டுகிறாள்; அவள் இதயம் உலகத்தில் மிதந்து சென்றது. ஆனால் அவளுடைய அதிர்ஷ்டமோ ஓர் ஊசி அளவுகூட நகர மறுத்தது!

51

அன்றிரவு முழுவதும் மகேந்திரன் துயில் கொள்ளவே இல்லை. உடல் சோர்ந்து விடியலில் நன்றாகத் தூங்கிவிட்டான். மணி எட்டு அல்லது ஒன்பது இருக்கும்போது திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். கடந்த இரவின் முடியாத வேதனை, உறக்கத்திலும் உள்ளூற ஓடிக்கொண் டிருந்தது. விழித்துக் கொண்டதும் அந்த வேதனை அவனை வாட்டத் தொடங்கியது. சற்று நேரத்துக்கெல்லாம் கடந்த இரவில் நடந்த யாவும் தெளி வாய் அவன் மனத்தில் எழுந்தன. காலை வெயிலும், உறக்கம் போதாததனால் உண்டான சோர்வும் சேர்ந்துகொள்ளவே, வாழ்வும் உலகமும் அவனுக்குச் சுவையற்றவையாகத் தோன் றின. குடும்பத்தைத் துறந்ததனால் உண்டான கஷ்டம், கடமையை மீறியதால் தோன்றிய ஆழ்ந்த வேதனை, சுற்றித் திரியும் இந்த வாழ்வின் அலைச்சல் இவைகளையெல்லாம் அவன் எதற்குச் சுமந்து திரிய வேண்டும்? மயக்க வெறி இராத இந்த விடியலின் வெளிச்சத்தில், தான் விநோதினியைக் காதலிக்கவில்லை என்று மகேந்திரனுக்குத் தோன்றியது.

வெளியே உலகம் விழிப்புக் கொண்டது; அவரவர் பரபரப்புடன் தங்கள் வேலைக்குச் சென்றவாறு இருந்தனர். சுயமரியாதையைச் சேற்றில் தள்ளிவிட்டு, தன்னை வெறுக்கும் ஒரு பெண்ணின் காலடியில் சோம்பேறித்தனமான வாழ்க்கையில் கட்டுண்டு கிடப்பது முட்டாள்தனம் என்று அவனுக்குத் தெளிவாகியது. தீவிரமான ஓர் உணர்ச்சிப் பெருக்குக்குப் பின்னர் இதயத்தில் சோர்வு நேரிடுவது இயல்பு. சோர்வுற்ற இதயம் தன் சோர்வுக்குக் காரணமான விஷயத்தைச் சற்று நேரம் ஒதுக்கித் தள்ள விரும்புகிறது. அந்த ஓய்வுக் காலத்தில் அடிப்புரையில் மறைந்திருந்த சேறும் வெளியாகிறது. மோக வெறியைக் கிளப்பிய பொருளின்மேல் வெறுப்பும் பிறக்கிறது. நாம் எதற்காக இவ்வாறு அவமானப்படுகிறோம் என்பது அவனுக்குப் புரியவில்லை. 'எல்லா விதத்திலும் நான் விநோதினியைக் காட்டிலும் உயர்ந்தவன். இருந்தும் இன்று பலவிதமான கஷ்டங்களையும் ஈனத்தனத்தையும் ஏற்றுக்கொண்டு வெறுக்கப்பட்ட பிச்சைக்காரன் போல் அவள் பின்னாலேயே சுற்றி அலைகிறேனே! இந்தப் பைத்தியக்காரத்தனத்தை என் மனத்தில் எந்தப் பேய் புகுத்தியதோ?' என்று அவன் எண்ணினான். விநோதினி அவன்வரைக்கும் ஒரு பெண் பிள்ளைதான்! உலகின் பொலிவும் காவியங்களின் இசையும், கதைகளின் சுவையும் கலந்து எழுந்த ஓர் ஒளிப்பதுமையைக் கண்டு அவன் வசியமானான். இன்று அவை கானல் நீரைப் போல் மறைந்துவிடவே சாதாரணப் பெண் ஒருத்தியே அங்கு நின்றாள். அவளிடம் அப்படி வியக்கத் தக்கது ஒன்றுமில்லை!

இந்த வெட்கக்கேடான மோகச் சுழலிலிருந்து விடுபட்டு வீடு செல்வதற்காக அவன் பரபரப்படைந்தான். அமைதி, அன்பு யாவும் அவனுக்கு இருந்தன. இன்று அவை மீண்டும் அவனுக்கு அமுதமாகத் தோன்றின. சிறுபிராயம் முதல் சிதையாத விஹாரியின் நட்பு இன்று அவனுக்கு மிகவும் உயர்ந்ததாகவே பட்டது. 'உண்மையில் ஆழ்ந்து நிலையானது எதுவோ, அது கஷ்டப்படாமல் தடையின்றி நமக்குக் கிடைத்துவிடுகிறது. அதனால்தான் அதன் பெருமை நமக்குத் தெரிவதில்லை. வெறும் மாயையோ நிலையாக அநுபவித்தாலும் முழு நிறைவு ஏற்படுவதில்லை. அது நம்மைத் தன் பின்னால் ஓடவைத்து அலைக்கழிக்கிறது. அதனால் நாம் வேண்டும் செல்வம் அதுதான் என்று எண்ணி நாமும் மயங்குகிறோம்' என்று அவன் தனக்குள் கூறிக்கொண்டான்.

'இன்றைய தினமே வீட்டுக்குச் சென்றுவிடலாம். விநோதினி எங்கே தங்க நினைக்கிறாளோ, அங்கே அவளுக்கு ஓர் ஏற்பாட்டைச் செய்து வைத்துவிட்டால் எனக்கு விடுதலை'

என்றெண்ணினான். 'எனக்கு விடுதலை' என்று அழுத்தமாக உச்சரிக்கும்போது அவன் உள்ளத்தில் ஒரு களிப்புத் தோன்றியது. இதுகாறும் அவன் ஓயாத தயக்கம் ஒன்றைச் சுமந்து திரிந்தான். அந்தச் சுமை இன்று தளர்ந்தது. இந்தக் கணத்தில் தனக்குப் பிடிக்காத ஒன்றெனத் தோற்றுவதை, மறு கணமே நிறைவேற்றுவது அவனால் முடியாமல் இருந்தது. அழுத்தமாக, 'சரி' என்றோ 'இல்லை' என்றோ சொல்லக் கூடிய நிலையில் அவன் இதுவரையில் இல்லை. அவனுடைய உள்ளத்தினுள்ளே எழுந்த உத்தரவுகளை மீறியே அவன் வேறு வழியில் நடந்தான். இப்போது அவன், 'எனக்கு விடுதலை' என்று சொல்லவே, ஊசலாடிக்கொண்டிருந்த அவனது இதயம் ஆறுதல் பெற்று அவனை வாழ்த்தியது.

மகேந்திரன் அப்போதே படுக்கையைவிட்டு எழுந்து முகம் கழுவிக்கொண்டு விநோதினியைக் காணச் சென்றான். அங்கு அவள் கதவை அடைத்துக்கொண்டிருந்தது கண்டு, ''தூங்குகிறாயா?'' என்று கதவைத் தட்டினான்.

''இல்லை. நீ போய் விடு'' என்றாள் விநோதினி.

'உன்னுடன் அவசியமாகப் பேச வேண்டும். நான் வெகு நேரம் நிற்கமாட்டேன்.''

''நான் இனி எதையும் கேட்கத் தயாராக இல்லை. நீ போ! எனக்கு வெறுப்பூட்டாதே! என்னைத் தனியே இருக்க விடு.''

வேறொரு சமயமாக இருந்தால் மகேந்திரனுடைய ஆத்திரம் இந்தப் பதிலைக் கேட்டு அதிகரித்திருக்கும். ஆனால் இப்போதோ அவனுக்கு வெறுப்புத் தட்டியது. 'ஒரு சாதாரணப் பெண்ணான இவளிடம் நான் இவ்வளவு தூரம் தாழ்ந்து போய் விட்டேனே! நினைத்தபோதெல்லாம் இப்படி என்னை ஒதுக்கித் தள்ளும் அளவுக்கு இவளுக்கு அதிகாரம் பிறந்துவிட்டதே! இது இவளுக்கு இயல்பானதல்ல. நான்தான் இவளுக்கு அதிகாரம் கொடுத்துக் கர்வத்தை இப்படி அநியாயமாக வளர்த்துவிட்டேன்' என்று எண்ணும்போது அவன் தன்னுடைய மேன்மையை உணர முற்பட்டான். 'நான் வெற்றி பெறுவேன். இவளுடைய தொடர்பை அறுத்துக் கொண்டு போய்விடுவேன்'' என்று தீர்மானித்தான்.

சாப்பிட்டானதும் பணம் எடுத்துவர மகேந்திரன் பாங்கிக்குச் சென்றான். பணத்தை வாங்கிக்கொண்டு ஆசாவுக்கும் தாய்க்கும் ஏதாவது நல்ல பொருள்கள் வாங்கும் எண்ணத்துடன் அலாகாபாத் கடைத் தெருவில் சுற்றினான்.

மீண்டும் விநோதினியின் வீட்டு வாசற் கதவை யாரோ தட்டினார்கள். முதலில் அவள் வெறுப்புடன் பதில் ஒன்றும்

கூறவில்லை. பின்னர்த் திரும்பத் திரும்பத் தட்டும் ஓசை கேட்கவே விநோதினிக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. அவள் வேகமாகக் கதவைத் திறந்து, ''ஏன் திரும்பத் திரும்ப எனக்கு எரிச்சல் மூட்டுகிருய்?'' என்று தொடங்கியவள் முடிக்கு முன்னரே, எதிரே விஹாரி நிற்பதைக் கண்டாள்.

வீட்டின் உள்ளே மகேந்திரன் இருக்கிருஞ என்று விஹாரி ஒருமுறை எட்டிப் பார்த்தான். உள்ளே படுக்கை அறையில் உலர்ந்த மலர்களும் அறுந்த பூமாலைகளும் கிடப்பதைக் கண்டான். மறு கணமே அவனுடைய மனத்திற்குள் வெறுப்புக் குடி கொண்டது. தொலைவில் இருந்தமட்டிலும் விநோதினியின் வாழ்க்கைபற்றிச் சந்தேகப்படும்படியான எண்ணம் எதுவும் அவன் மனத்தில் எழுந்ததில்லை என்று சொல்ல முடியாது. ஆனல் கற்பனையில் எழுந்த அந்த எண்ணத்தையும் மூடிக் கொண் டிருந்தது, அந்த மோகினியின் வடிவம். தோட்டத்தினுள் நுழைந்தபோது விஹாரியின் இதயம் அடித்துக்கொண்டது. கற்பனை உருவம் சிதைந்துவிடுமோ என்று அவனுடைய உள்ளம் தவித்தது. விநோதினியின் படுக்கை அறைக்கு எதிரே நின்றபோது விஹாரியின் உள்ளத்தில் பேரிடி விழுந்தது.

ஒரு காலத்தில் தன் காதலினல் விநோதினியின் வாழ்க்கையிலுள்ள மாசுகளைக் கழுவிச் சுலபமாகச் சுத்தமாக்கிக் கொள்ள முடியும் என்று விஹாரி எண்ணியதுண்டு. அருகில் வந்தபோது, அது சுலபமல்ல என்று அவனுக்குத் தெரிந்தது. உள்ளத்தில் சற்றும் கருணையோ, அநுதாபமோ பிறக்கவில்லையே! வெறுப்பின் அலைதான் கிளம்பி அவன் மனத்தைக் கவிந்துகொண்டது. விநோதினியை அவன் மாசு படிந்தவளாகவே எண்ணிஞன்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் விஹாரி திரும்பி நின்று, ''மகேந்திரா!'' என்று அழைத்தான்.

இந்த அவமதிப்பைப் பொறுத்துக்கொண்டாள் விநோதினி. ''மகேந்ர இல்லை. பட்டணத்துக்குப் போயிருக்கிருர்'' என்ருள்.

விஹாரி செல்லக் கிளம்பியபோது அவள், ''விஹாரி பாபு! உங்கள் காலில் விழுகிறேன். கொஞ்சம் இருங்கள்'' என்ருள்.

எந்த விதமான வேண்டுகோளையும் கேட்பதில்லை, வெறுக்கத் தக்க இக்காட்சியை விட்டுத் தொலைவில் சென்றுவிட வேண்டும் என்று நினைத்த விஹாரியும் விநோதினியின் குரலில் தொனித்த கெஞ்சுதலைக் கேட்டதும் கண நேரம் காலெடுத்து வைக்க முடியாமல் நின்ருன்.

''இன்று நான் சொல்வதைக் கேட்காமல் வெறுப்புடன்

நீங்கள் சென்றுவிட்டால், உங்கள் மேல் ஆணை, நான் தற்கொலை செய்துகொள்வேன்'' என்றாள் விநோதினி.

விஹாரி திரும்பி நின்றான். ''விநோதினி! உன் வாழ்க்கையுடன் என்னை ஏன் பிணைக்கப் பார்க்கிறாய்? நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன்? உன் வழியின் குறுக்கே நான் என்றைக்குமே வராதவன். உன் சுகதுக்கங்களில் நான் குறுக்கிடவுமில்லை'' என்றான்.

''நீங்கள் என் உள்ளத்தை எவ்வளவு தூரம் அடிமைப் படுத்திவிட்டீர்கள் என்பதை ஒரு தடவை உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். அதை நீங்கள் நம்பவில்லை. இருந்தாலும், இன்று உங்கள் வெறுப்புக்கு முன்பே இதை மீண்டும் சொல்கிறேன். வெட்கப்பட்டுச் சொல்வதற்கு எனக்கு நீங்கள் அவகாசம் தரவில்லை. என்னை ஒதுக்கிவிட்டீர்கள். ஆனால் நான் உங்கள் பாதங்களைப் பிடித்துக்கொண்டு சொல்கிறேன். உங்களை நான்....''

விஹாரி குறுக்கிட்டான்: ''அதை மீண்டும் சொல்லாதே! வாயால் அந்தச் சொல்லை எடுக்காதே! அதை நம்ப வழியில்லை.''

''அதை வேறு அற்பர்கள் நம்ப மாட்டார்கள். ஆனால் உங்களுக்கு அதில் நிச்சயம் நம்பிக்கை உண்டு. அதனால்தான் நான் உங்களை உட்காரச் சொல்லி வேண்டுகிறேன்.''

''நான் நம்புகிறேனோ இல்லையோ, அதனால் என்ன வந்துவிடப் போகிறது! உன் வாழ்க்கை இன்றுபோல் என்றும் நடக்கும் அல்லவா!''

''உங்களுக்கு இதனால் ஒன்றும் வந்துவிடப் போவதில்லை என்று எனக்கும் தெரியும். என் அதிர்ஷ்டம், இப்படி உங்கள் மரியாதையைக் காப்பாற்றி உங்கள் பக்கத்தில் நிற்க எனக்கு வழியில்லை. எப்போதும் உங்களைவிட்டு விலகியேதான் நான் இருக்க வேண்டும். உங்களிடம் நான் கேட்பது இது ஒன்றுதான்: நான் எங்கு இருந்தாலும் சரி, நீங்கள் என்னைப்பற்றி எண்ணுவது நல்லதாகவே இருக்கட்டும். அதில் சற்றுவது இனிமை இருக்கட்டும். என்மேல் உங்களுக்கு ஓரளவு அக்கறை பிறந்தால் அதையே நான் எனக்கு உறுதுணையாகக் கொள்வேன். அதற்காகவே நான் சொல்வதை நீங்கள் கேட்டாக வேண்டும். நான் கை கூப்பி வேண்டுகிறேன். கொஞ்சம் உட்காருங்கள்.''

''சரி, வா'' என்று விஹாரி வேறு அறையை நோக்கி நடந்தான்.

''நீங்கள் நினைப்பதுபோல் இல்லை. இந்த அறையை மாசு தீண்டவில்லை. நீங்கள் இந்த அறையில் ஒரு நாள் படுத்திருந்தீர்கள். உங்கள் பொருட்டே இந்த அறையைச்

சமர்ப்பணம் செய்திருக்கிறேன். இந்த மலர்கள் உங்கள் பூஜைக்கு உபயோகமாகி இன்று உலர்ந்தவை. இந்த அறையில்தான் நீங்கள் உட்காரவேண்டும்.''

இதைக் கேட்டதும் விஹாரியின் உள்ளம் இன்பத்தால் சிலிர்த்தது. அவன் அறையினுள் நுழைந்தான். விநோதினி இரு கரங்களாலும் கட்டிலைக் காண்பிக்க, விஹாரி அதன்மேல் உட்கார்ந்தான். விநோதினி அவனுடைய காலருகில் தரையில் உட்கார்ந்தாள். விஹாரி பரபரப்படைவது கண்டு விநோதினி, '''உட்காருங்கள் எழுந்திருக்க வேண்டாம். என் தலையைத் தின்றாற்போல்! உங்கள் காலருகே உட்காரக்கூட எனக்குத் தகுதி இல்லை. நீங்களாகத் தயை செய்து எனக்கு அங்கு இடம் அளித்தீர்கள். தொலைவில் இருந்தாலும் எனக்கு இந்த உரிமை இருக்கட்டும்'' என்றாள்.

விநோதினி சற்று நேரம் கம்மென்றிருந்தாள். பின்னர்த் திடீரென்று, ''நீங்கள் சாப்பிட்டாயிற்று?'' என்று கேட்டாள்.

''ஸ்டேஷனிலேயே சாப்பிட்டுவிட்டேன்.''

''நான் ஊரிலிருந்து உங்களுக்குக் கடிதம் எழுதினேன். அதைத் திறந்து விட்டு எனக்குப் பதில் எழுதாமல் மகேந்திரன்மூலம் திருப்பி அனுப்புவானேன்?''

''எனக்குக் கடிதம் எதுவும் கிடைக்கவில்லையே?''

''இந்தத் தடவை மகேந்திரனைக் கல்கத்தாவில் பார்க்கவே இல்லையா?''

''உன்னை ஊருக்கு அனுப்பிய மறு நாள் மகேந்திரனைப் பார்த்தேன். அதற்குப் பின்னரே நான் மேற்கே யாத்திரை கிளம்பிவிட்டேன். அப்புறம் அவனைப் பார்க்கவில்லை.''

''அதற்கும் முன்னர் ஒரு நாள் என் கடிதத்தைப் படித்து விட்டுப் பதில் தராமல் திருப்பி அனுப்பியதுண்டா?''

''இல்லை; ஒரு போதும் அப்படி நடந்ததில்லை.''

விநோதினி திகைத்து உட்கார்ந்திருந்தாள். பின்னர்ப் பெருமூச்சுடன், ''எல்லாம் புரிந்துவிட்டது. இப்போது நான் சொல்ல வேண்டியதைச் சொல்லுகிறேன். நம்பினால், என் அதிர்ஷ்டமாக நினைப்பேன்; இராவிட்டால் உங்களைக் குறை சொல்லப் போவதில்லை. என்னை நம்புவதும் கடினந்தான்'' என்றாள்.

விஹாரியின் மனம் இளகிவிட்டது. பக்தி நிரம்ப விநோதினி செய்த பூஜையை அவமதிக்க அவனால் முடியவில்லை.

''நீ ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எதையும் கேளாமலேயே உன்னை நான் நம்புகிறேன். உன்னை வெறுக்க என்னால் முடியாது. இதற்குமேல் நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்.''

இதைக் கேட்டு விநோதினியின் விழிகளில் நீர் நிறைந்தது.

அவள் விஹாரியின் காலைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். ''எல்லாவற்றையும் சொல்லாவிட்டால் என் உயிர் நிற்காது. கொஞ்சம் பொறுமையுடன் கேளுங்கள். நீங்கள் எனக்கு உத்தரவிட்டீர்கள். நான் அதைத் தலைமேல் தாங்கினேன். எனக்குக் கடிதம் ஒன்றும் நீங்கள் எழுதவில்லை. இருந்தாலும், ஊராரின் அவதூறுகளையும் கேலியையும் பொறுத்துக்கொண்டு வாழ்நாளைக் கழித்திருக்கலாம். உங்கள் அன்புக்கு மாறாகத் தண்டனையையே ஏற்றுக்கொண் டிருப்பேன். ஆனால் தெய்வம், அதற்கும் தடையாக நின்றது. நானாகத் தூண்டிவிட்ட பாபம் என்னை அந்தத் தண்டனை யிலும் பின் தொடர்ந்தது. அங்கும் நிலைக்க விடாமல் செய்தது. மகேன் ஊருக்கு வந்து, வீட்டு வாயிலிலேயே ஊரார் முன்னிலையில் என்னைக் கஷ்டப்படுத்தினார். அந்த ஊரில் அதற்குப்பின் எனக்கு இடம் இல்லாமல் போயிற்று. இரண்டாவது முறை உங்கள் கட்டளையைப் பெற எங்கெல்லாமோ உங்களைத் தேடி அலைந்தேன். ஆனால் உங்களைக் காண முடியவில்லை. மகேன் திறந்த கடிதத்தை உங்கள் வீட்டிலிருந்து கொணர்ந்து என்னை ஏமாற்றினார். என்னை முற்றும் துறந்து விட்டீர்களென்று நான் எண்ணினேன். அதற்குமேல் நான் கெட்டுப் போயிருக்க முடியும். ஆனால் உங்களுக்கு என்ன சக்தி இருக்கிறதோ, தொலைவிலிருந்தே என்னைப் பாழாகவிடாமல் காப்பாற்றி விட்டீர்கள்! உங்களுக்கு உள்ளத்தில் இடம் அளித்த நான் தூய்மை பெற்று விட்டேன். என்னை அன்று விலக்கித் தள்ளி உங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளச் செய்தீர்கள். அந்த அறிமுகம் உறுதியான தங்கம் போன்றது; உறுதியான மாணிக்கம் போல் அது என் உள்ளத்தினுள் நிலைத்தது. அதனால் என் மதிப்பும் உயர்ந்து விட்டது. ஸ்வாமி! இந்தப் பாதங்களைத் தொட்டுச் சொல்லுகிறேன்: அந்த மதிப்புக் கெட்டு விடவில்லை'' என்றாள்.

விஹாரி கம்மென்று உட்கார்ந்திருந்தான். விநோதினியும் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. பிற்பகலின் ஒளி மெல்ல மெல்ல மங்கிக்கொண்டே வந்தது. இந்தச் சமயத்தில் மகேந்திரன் கதவருகில் வந்து விஹாரியைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றான். விநோதினியின்மேல் உண்டான வெறுப்பு, பொறாமையால் உந்தப்பட்டு அகலத் தொடங்கியது. விநோதினி விஹாரியின் காலடியில் கம்மென்று உட்கார்ந்திருப்பது ஒதுக்கித் தள்ளப்பட்ட மகேந்திரனுடைய பெருமைக்கு ஓர் இடி போல் இருந்தது. விஹாரியுடன் கடிதப் போக்குவரத்து இருக்கவேதான் இப்படி அவர்கள் சந்திக்க முடிந்தது என்று அவன் நம்பினான். இதுவரையில் விஹாரி வெறுப்புக்

கொண்டிருந்தவன், இப்போது தானே வந்து சிக்கிக்கொண்ட பின், விநோதினியைத் தடுக்க யாரால் முடியும்? விநோதினியைத் துறக்க மகேந்திரனால் முடியும். ஆனால் அவளை வேறு எவரிடமும் அளிக்க அவனால் முடியாது! விஹாரியைக் கண்டதும் அதை உணர்ந்தான்.

அவன் வீண் கோபத்துடன், ''இப்போது மேடையில் மகேந்திரன் மறைவு, விஹாரியின் நுழைவு!....அருமையான காட்சிதான்! கை கொட்டலாம் போல் இருக்கிறது! ஆனால், இதுதான் கடைசிக் காட்சி என்று நம்புகிறேன். இதற்குமேல் எதுவும் ரசிக்காது'' என்று குத்தலாகச் சொன்னான்.

விநோதினியின் முகம் சிவந்தது. மகேந்திரனுடைய உறவு தனக்குத் தேவை என்று இருக்கும் வரையில், இந்த அவமதிப்புக்கு அவளால் என்ன பதில் சொல்லமுடியும்? அவள் வேதனையுடன் விஹாரியின் முகத்தை நோக்கினாள்.

விஹாரி கட்டிலை விட்டு எழுந்தான். முன்னால் வந்து அவன், ''மகேன்! விநோதினியைக் கோழைபோல் அவமானம் செய்யாதே! உன் ஆண்மை உன்னைத் தடுக்காவிட்டால், உன்னை அடக்கும் திறமை எனக்கு உண்டு'' என்றான்.

'இதற்குள் உரிமை தீர்மானமாகிவிட்டதா? இன்று உனக்குப் புதுப் பெயரிட வேண்டியதுதான். விநோத விஹாரி!'' என்றதும் மகேந்திரன் சிரித்தான்.

அவமதிப்பு அளவை மீறுவது கண்டு விஹாரி மகேந்திரனுடைய கையைப் பிடித்துக்கொண்டான். ''மகேன்! விநோதினியை நான் மணம் செய்துகொள்ளப் போகிறேன். உனக்குச் சொல்லிவிட்டேன். இனிமேல் வாயைச் சற்று அடக்கிப் பேசு'' என்றான்.

இதைக் கேட்ட மகேந்திரன் வியப்பினால் வாயடைத்துப் போனான். விநோதினியும் திடுக்கிட்டாள். அவள் உள்ளத்தினுள் பெரும் புரட்சி மூண்டது.

''உனக்கு இன்னும் ஒன்று சொல்ல வேண்டும். உன் தாயார் சாகக் கிடக்கிறாள். அவள் பிழைக்கும் நம்பிக்கையே இல்லை. நான் இன்றிரவு வண்டியிலேயே போகிறேன். விநோதினியும் என்னுடன் திரும்புவாள்'' என்றான் விஹாரி.

விநோதினி திடுக்கிட்டு, ''அத்தைக்கு உடம்பா?'' என்றாள்.

''குணமாகக்கூடிய நோயல்ல. எப்போது என்ன நேரிடுமோ சொல்ல முடியாது.''

மகேந்திரன் அதற்குமேல் பேசாமல் அறையை விட்டு வெளியேறினான். விநோதினி விஹாரியிடம், ''நீங்கள் இப்போது சொன்னீர்களே, அந்த வார்த்தை எப்படி வெளி வந்தது? இதுவும் கேலியா?''. என்றாள்.

''இல்லை: நான் உண்மையைத்தான் கூறினேன். உன்னை நான் விவாகம் செய்துகொள்வேன்.''

''இந்தப் பாவியைக் கடைத்தேற்றும் பொருட்டுத் தானே?''

''இல்லை. உன்னை நான் காதலிக்கிறேன். உன்மேல் அக்கறை உண்டு. அதனால்தான்...''

''இதுவே எனக்குக் கிடைக்கும் பரிசு. இதை நீங்கள் ஏற்றுக்கொண்டதே போதும். வேறெதுவும் எனக்கு வேண்டாம். கிடைத்தாலும் அது நிலைக்காது! தெய்வமும் அதைப் பொறுக்காது!''

''ஏன் பொறுக்காது?''

''சீ! இதை மனத்தில் நினைக்கக்கூடக் கூசுகிறது; விதவை, அதிலும் பழிக்கு ஆளானவள். உலகின் முன்னர் உங்களை நான் அவமானத்துக்கு ஆளாக்கமாட்டேன். சீ! இதை இனி வெளியே சொல்லக்கூடாது.''

''நீ என்னை வெறுத்துவிடுவாயா?''

''வெறுத்துவிடும் உரிமை எனக்கு இல்லை. நீங்கள் இரகசியமாக எத்தனையோ நேயர்களுக்குப் பல விதமான நன்மைகள் செய்கிறீர்கள். உங்களுடைய நோன்பில் ஏதாவது ஒரு பொறுப்பை என்மீது சுமத்துங்கள். அதை ஏற்று நான் உங்கள் அடிமையாகவே இருப்பேன். ஆனால், சீச்சீ! விதவையை நீங்கள் மணப்பதா? உங்கள் பெருந்தன்மை, எதையுமே செய்யத் தயங்காது. ஆனால் நான் இதைச் செய்தால் - உங்கள் பெயருக்கு உலகத்தவர் முன்னிலையில் இழுக்கை உண்டாக்கினால் - இப்பிறவியில் என்னால் தலைநிமிர முடியாது.''

''ஆனால், விநோதினி, உன்னை நான் காதலிக்கிறேனே!''

''அந்தக் காதலின் உரிமையால், உங்களிடம் சொல்லுகிறேன்; எனக்கு ஒரே ஓர் ஆசைதான்'' என்று விநோதினி தரையில் விழுந்து அவனுடைய கால் விரல்களை முத்தமிட்டாள். பின்னர்க் காலடியில் உட்கார்ந்தாள். ''அடுத்த பிறவியில் உங்களை அடைய நான் தவங் கிடப்பேன். இந்தப் பிறவியில் எனக்கு ஓர் ஆசையும் இல்லை. கிடைக்க வேண்டியதும் எதுவும் இல்லை. நானே எவ்வளவோ கஷ்டம் கொடுத்தேன்; கஷ்டமும் பட்டுவிட்டேன்; எத்தனையோ பாடமும் கற்றுக்கொண்டேன். அதை மறந்திருந்தால் உங்களையும் அவமதிப்புக்குள்ளாக்கி, நானும் பாழாகியிருப்பேன். ஆனால் நீங்கள் மேலானவர். அதனால்தான் இன்று என்னால் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது. இந்தப் பிணைப்பை நான் மண்ணாக்க விடமாட்டேன்.''

விஹாரி கம்மென்று உட்கார்ந்திருந்தான். விநோதினி

கைகளைக் கூப்பினாள்; "தவறு செய்துவிடாதீர்கள். என்னை மணந்தால், நீங்கள் சுகப்பட முடியாது. உங்கள் பெருமை குன்றிவிடும். எனக்கும் மதிப்புப் போய்விடும். நீங்கள் பற்றுதலின்றி மலர்ச்சியுடன் எப்போதும் போல் இருக்க வேண்டும். நான் தொலைவிலிருந்தே உங்களுக்குத் தொண்டு புரிகிறேன். நீங்களும் களிப்புறலாம்..சுகம் அடையலாம்" என்றாள்.

52

மகேந்திரன் தாயின் அறைக்குள் நுழைய வந்தபோது ஆசா பரபரவென்று வெளியே வந்தாள். "இப்போது உள்ளே போக வேண்டாம்" என்றாள்.

"ஏன்?"

"திடீரென்று அம்மாவின் மனசில் நல்லதோ கெட்டதோ எந்த விதமான அதிர்ச்சியும் நேரிடக்கூடாது என்று டாக்டர் சொன்னார். அபாயம் உண்டாகுமாம்."

"நான் மெல்லப் போய்த் தலைமாட்டிலிருந்து அவளைப் பார்த்துவிட்டு வருகிறேன். அவளுக்கு அது தெரியாது."

"சிறு சத்தம் கேட்டாலுங்கூட அம்மா திடுக்கிடுகிறாள். நீங்கள் போனால் நிச்சயம் தெரிந்துவிடும்."

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"முதலில் விஹாரிபாபு வந்து பார்க்கட்டும். அவர் சொல்கிறபடி செய்யலாம்."

அதற்குள் விஹாரியே அங்கு வந்தான். ஆசாதான் அவனுக்குச் சொல்லி அனுப்பியிருந்தாள்.

"மன்னி! என்னைக் கூப்பிட்டாயா? அம்மாவுக்கு ஒன்றுமில்லையே?"

விஹாரியைக் கண்டதும் ஆசாவுக்கு நிம்மதி ஏற்பட்டது. "நீங்கள் போனதுமுதலே அம்மாவுக்கு இன்னும் கஷ்டம் அதிமாகிவிட்டது. முதல் நாள் உங்களைக் காணுமல் என்னைக் கேட்டாள், விஹாரி எங்கே என்று. 'ஏதோ அவசர வேலையாகப் போனார்; வியாழக்கிழமைக்குள் வந்து விடுவார்' என்றேன். வாய் திறந்து பதில் சொல்லவில்லை. அதுமுதல் அடிக்கடி வாரிப் போடுகிறது. உள்ளூற யாரையோ எதிர்பார்க்கிறாள் போல் இருக்கிறது. உங்கள் தந்தி கிடைத்ததும் இன்று நீங்கள் வருவதாகச் சொன்னேன். இன்று உங்களுக்காகப் பலமாக விருந்து தயாரிக்கச் சொன்னாள். உங்களுக்குப் பிடித்த

வற்றையெல்லாம் வாங்கி வரச்சொல்லி எதிரே வராந்தாவில் சமைக்க ஏற்பாடு செய்திருக்கிருள். தானே சொல்லித் தரப் போகிருளாம். டாக்டர் தடுத்தால் கேட்கவே இல்லை. சற்று முன்னுல்தான் என்னைக் கூப்பிட்டு, 'அம்மா! நீ உன் கையாலேயே சமைக்க வேண்டும். நான் எதிரே உட்கார்ந்து விஹாரிக்குச் சாதம் போடுவேன்' என்ருள்.''

இதைக் கேட்டு விஹாரியின் கண்களில் நீர் பெருகியது. ''இப்போது அம்மா எப்படி இருக்கிருள்?'' என்ருன்.

''நீங்களே வந்து பாருங்களேன். எனக்கென்னவோ அதிகமாகத்தான் படுகிறது'' என்ருள் ஆசா.

விஹாரி உள்ளே சென்ருன். மகேந்திரன் வெளியே வியப்புடன் நின்றுகொண்டிருந்தான். ஆசா வீட்டுக்கு எஜமானியாகிவிட்டாள். எவ்வளவு சகஜமாக அவள் அவனை உள்ளே நுழையாமல் தடுத்துவிட்டாள்! ரோஷமோ, தயக்கமோ அதில் இல்லையே! மகேந்திரனுடைய பலம் எவ்வளவோ குறைந்துவிட்டது. குற்றவாளி அவன்! வெளியிலேயே கம்மென்று நின்ருன். தாயின் அறையினுள் நுழையவும் அவனுல் முடியவில்லை.

அதுவும் வியக்கத் தக்கதுதான். விஹாரியுடன் ஆசா சற்றும் கூச்சமின்றிப் பேசுகிருளே! எல்லா ஆலோசனைகளும் அவனிடந்தான். குடும்பத்தைக் காப்பாற்றுபவன் அவன் ஒருத்தன்தான்! எல்லாருக்கும் அவன் நண்பன். அவன் எங்கும் போய் வருகிருன். எல்லாரும் அவன் சொன்னபடி கேட்கிருர்கள். மகேந்திரன் சில நாட்கள் முன்னர் விட்டுச் சென்ற இடம், திரும்பி வந்தபோது அவ்வாறே இல்லை.

விஹாரி அறையினுள் நுழையவும், ராஜலட்சுமி அன்பூறும் விழிகளுடன் அவனைப் பார்த்தாள்: ''விஹாரி! வந்துவிட்டாயா!'' என்ருள்.

''ஆம், அம்மா..வந்துவிட்டேன்.''

''உன் வேலை முடிந்துவிட்டதா?'' என்று அவள் அவன் முகத்தையே உற்று நோக்கிஞள்.

''ஆமாம், அம்மா! எல்லாம் சுபமாக முடிந்துவிட்டன. இனி எனக்கு யாதொரு கவலையும் இல்லை'' என்று விஹாரி வெளியே நோக்கிஞன்.

''இன்று ஆசா தன் கையால் சமைக்கிருள். நான் இங்கிருந்து சொல்லித் தரப் போகிறேன். டாக்டர் கூடாதென்கிருர். இனிமேல் எதற்கடா தடை? நீ சாப்பிடுவதைக் கண் குளிர ஒரு தடவை பார்க்காமல் சாவதா?''

''டாக்டர் தடை சொல்லக் காரணம் எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை, அம்மா! நீ சொல்லிக் கொடுக்கா

விட்டால் நடக்குமா! சின்னவயசு முதல் நீ போடாவிட்டால் எனக்குச் சாப்பாடே ருசிக்காது. மகேனுக்குக்கூட மேற்கத்தி ரொட்டியும் பருப்பும் சாப்பிட்டு நாக்குச் செத்துவிட்டதாம். இன்று நீ செய்த மீன் கூட்டுச் சாப்பிட்டால் அவனுக்கு நிச்சயம் உயிர் திரும்பியது போல் இருக்கும். இன்று நாங்கள் அண்ணன் தம்பிகள் ஆகிவிட்டோம். சின்ன வயசில் செய்தது போல் போட்டி போட்டுக்கொண்டு சாப்பிடப் போகிறோம். உன் மரு மகளால் சமைக்க முடிகிறதா, பார்க்கலாம்!''

மகேந்திரனை அழைத்துக்கொண்டுதான் விஹாரி வந் திருக்கிறான் என்று ராஜலட்சுமிக்குத் தெரியும். இருந்தாலும், மகேந்திரனுடைய பெயரைக் கேட்டதும் அவளுக்குக் கொஞ்ச நேரம் மார்பு படபடக்க, மூச்சுவிடுவதே கஷ்டமாக இருந்தது. அது சற்றுக் குறைந்ததும் விஹாரி, ''மகேந்திரனுடைய உடம்பு, மேற்கே போனதில் மிகவும் தேறிவிட்டது. வழியிலே சற்று அலைச்சல்; அதுதான் வாட்டம். குளித்துச் சாப்பிட்டால் சரியாகிவிடும்'' என்றான்.

ராஜலட்சுமி அப்போதும் மகேந்திரனுடைய பேச்சையே எடுக்கவில்லை. விஹாரி மீண்டும், ''அம்மா, மகேன் வெளியே நிற்கிறான். நீ கூப்பிடாமல் அவன் வர முடியாதே!'' என்றான்.

ராஜலட்சுமி வாய் திறவாமல் கதவை நோக்கினாள். விஹாரி உடனே, ''மகேன் அண்ணா! உள்ளே வா'' என்றான்.

மகேந்திரன் மெல்ல உள்ளே நுழைந்தான். இதயம் நின்றுவிடுமோ என்ற அச்சத்தில் ராஜலட்சுமி மகேந்திர னுடைய முகத்தை அப்போது பார்க்கவில்லை. கண்களைச் சற்றே மூடிக்கொண்டாள். மகேந்திரன் படுக்கையை நோக்கிய தும் திடுக்கிட்டான். யாரோ அவனை அடிப்பதுபோல் இருந் தது.

மகேந்திரன் தாயின் காலடியில் தலையை வைத்து விழுந்து விட்டான். இதயத் துடிப்பால் ராஜலட்சுமியின் உடம்பு நடுங்கியது.

சற்றுப் பொறுத்து அன்னபூரணி மெல்ல, ''அக்கா மகேனை எழுந்திருக்கச் சொல்லுங்கள். இராவிட்டால் அவன் எழுந்திருக்கமாட்டான்'' என்றாள்.

ராஜலட்சுமி மிகவும் கஷ்டத்துடன், ''மகேன், எழுந் திரடா'' என்றாள்.

மகேனின் பேரைச் சொன்னதுமே வெகு நாட்கள் கழித்து அவள் கண்களில் நீர் பலபலவென்று உதிர்ந்தது. கண்ணீர்ப் பெருக்கில் உள்ளத்தின் வேதனையும் ஓரளவு குறைந்தது. மகேந்திரன் எழுந்து மண்டியிட்டவாறு கட்டிலின்மேல் சாய்ந்து தாயின் அருகே உட்கார்ந்தான். ராஜலட்சுமி

கஷ்டத்துடன் திரும்பி இரண்டு கைகளாலும் மகேந்திரனது தலையைத் தூக்கி உச்சிமோந்து, நெற்றியில் முத்தமிட்டாள்.

மகேந்திரனுக்குத் தொண்டை அடைத்தது. ''அம்மா! உனக்கு மிகவும் கஷ்டம் கொடுத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு'' என்றான் அவன்.

சற்று மார்பு வலி குறைந்ததும் ராஜலட்சுமி, ''அப்படிச் சொல்லாதேடா, மகேன்! உன்னை மன்னிக்காமல் இருக்க என்னால் முடியுமாடா? அம்மா, ஆசா! எங்கேடி போனாய்?'' என்றாள்.

ஆசா பக்கத்து அறையில் பத்தியம் உணவு தயாரித்துக் கொண்டிருந்தாள். அன்னபூரணி அவளை அழைத்து வந்தாள்.

தரையிலிருந்து எழுந்து தன் பக்கத்தில் கட்டில்மேல் உட்காரும்படி மகேந்திரனுக்கு ராஜலட்சுமி சாடை காட்டினாள். மகேந்திரன் உட்கார்ந்ததும், அவன் பக்கத்தில் இடம் காட்டி, ''அம்மா, ஆசா, இங்கே நீ உட்கார். இன்று உங்களை ஒன்றாக உட்கார வைத்துக் கண் குளிரப் பார்க்கிறேன். என் கஷ்டமெல்லாம் தன்னால் போய்விடும். அம்மா! என்னிடம் என்ன கூச்சம் உனக்கு! மகேனின்மேல்கூட நீ ஒரு கோபமும் வைத்துக்கொள்ளக்கூடாது. வா; இங்கே உட்கார்: என் கண்களைக் குளிரச் செய்'' என்றாள் ராஜலட்சுமி.